★★★

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 | இதழ் 14
17—12—1978

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

காட்சி 15

—தொடர்ச்சி—

[அண்ணாச்சி, நொண்டி, சுந்தரி மூவரையும் தனியாகவிட்டுவிட்டு பாலம்மாள் அடுக்களைப் பக்கம் ஒரு பாயையும் தலையணையையும் எடுத்துக்கொண்டு போகிறாள். சுந்தரி, அண்ணாச்சி, நொண்டி இருவரையும் பார்த்துப் போலிப் புன்னகை புரிகிறாள். அவளை நெருங்கித் தொடுவதற்கு இளித்தவாறு அண்ணாச்சி முயற்சி செய்கிறான். சுந்தரி, வேறுபுறமாக நாணிக்கோணி ஒதுங்கிக்கொண்டு நொண்டி நிற்கும் இடத்திற்கு அருகே வருகிறாள். நொண்டி, பல்லைக் காட்டிக்கொண்டு சுந்தரியை நெருங்கித் தொடுவதற்கு முனைகிறான். அவள், அவனையும் சமாளித்துக்கொண்டு அப்பால் போய் அறைக்குள் நுழைந்து இரண்டு கிளாஸ்களில் மதுவை ஊற்றிக்கொண்டு வந்து இருவர் கைகளிலும் தருகிறாள். இருவரும் மதுக்கிளாசுகளை மிகுந்த உற்சாகத்தோடு வாங்கிப் பருகுகிறார்கள். இருவருக்கும் மேலும் போதை ஏறுகிறது. சுந்தரி, இருவருக்கும் மத்தியில் வந்து நின்று கொள்கிறாள். அண்ணாச்சியும் நொண்டியும் 'சொக்கி கண்ணே சொக்கி! என்னைக் கட்டிப்பிடி சொக்கி!' என்றுகொஞ்சியவாறு அவளை நெருங்கும்போது, அவள் விலகிக்கொள்கிறாள். அண்ணாச்சியும் நொண்டியும் "சொக்கி யென்று நினைத்து ஒருவரையொருவர்கட்டிப் பிடித்துக் கொள்கிறார்கள். சுந்தரி, தொலைவில் ஓடி நின்று "கலகல' எனச்சிரிக்கிறாள்.]

அண்ணாச்சி: டே, நொண்டி! நீ ஏண்டா குறுக்கே வர்ரே?

நொண்டி: அது சரி' எனக்கும் சொக்கிக்கும் குறுக்கே நந்தி மாதிரி வர்ரது நீயா? நானா?

அண்ணாச்சி: என்னடா மரியாதையில்லாமப் பேசுறே? போதை ரொம்ப தலைக்கேறிப் பூட்டுதா?

நொண்டி: யாருக்கு? உனக்குத்தான் போதை ஏறிக் கிடக்கு!......நான் இப்ப நேத்தியல்ல...... ரொம்ப நாளா சொக்கியை அடையணும்னு தவங் கிடக்கிறேன். ஏன் சொக்கி? நான் சொல்றது உண்மைதானே?

சுந்தரி: ஆமாம்! எனக்காக நீங்க உயிரைக்கூட விடுவீங்க?

நொண்டி: அப்படிச் சொல்லு!. உயிரு மாத்திரம் மனுஷன் வாயில இருக்கிற பல்லு மாதிரி முப்பத்திரண்டு இருந்தா அந்த முப்பத்திரண்டு உயிரையும் விடுவேன்!

சுந்தரி: அய்யோ வேண்டாங்க! முப்பத்தியோரு உயிரை விட்டுட்டு — ஒரு உயிரை மட்டும் எனக்காக வச்சுக்கிங்க!

அண்ணாச்சி. டே நொண்டி! உன்னோட முப்பத்திரண்டு உயிரையும் நீயாவே விடுறியா? இல்லே; நான் தட்டி எடுக்கட்டுமா?

நொண்டி: ஹா! என்ன சொன்னே? என் ஆருயிர்க் காதலி — என் பச்சைக்கிளி - என் சொக்கிக்கு நேரா என்னை அவமானப் படுத்திட்டே! இதை என்னால பொறுக்க முடியுமா சொக்கி?

சொக்கி: போனாப்போவுது கொஞ்சம் பொறுக்குங்க!

நொண்டி: சரி! உனக்காகப் பொறுக்கிறேன்.

அண்ணாச்சி: என்னடா பொம்பளைக்கு நேரா சவடால் அடிக்கிறே? நீ ரொம்ப நாளா தவம் இருந்திருக்கலாம் இந்த சொக்கிக்காக! ஆனா தவம் இருக்கிறவங்களுக்கெல்லாம் தேவி வரம் கொடுக்கிறது இல்லே! ஞாபகம் இருக்கட்டும்! எனக்குத்தான் இந்தத் தேவி வரம் கொடுத்திருக்கா! இல்லியா சொக்கி?

சுந்தரி: (அம்பாளைப்போல அருள்பாலிக்கும் நிலையில் அபிநயம் காட்டி நின்றுகொண்டு)

எந்தப் பக்தன் என்னை மனமார நேசிக்கிறானோ — எந்தப் பக்தன் எனக்காக எத்தகைய சோதனைக்கும் தயாராக இருக்கிறானோ - அந்தப் பக்தனுக்கே இந்தத் தேவியின் அருள் சித்திக்கும்!

அண்ணாச்சி: அப்படிச் சொல்லம்மா! அம்பிகே! உன் அருளே அருள்! ஏய்; நொண்டி! உனக்கு மட்டுமே சொந்தங் கொண்டாடினாயே இந்த சொக்கியை, இப்ப பாத்தியா? நம்ப இரண்டு பேருலே ஒருத்தன்தான் அடைய முடியும்னு திட்டவட்டமா சொல்லிட்டா! இப்ப நாக்கைப் புடுங்கிக்கிட்டு சாவுடா, சாவு!

நொண்டி: எதுக்காக நான் நாக்கைப் புடிங்கிகிட்டு சாவணும்? நாக்கைப் புடிங்கிகிட்டு சாக வேண்டியவன் எல்லாம் நாலு பேரு மத்தியிலே மேடை போட்டுகிட்டுப் பேசுறான் — நான் எதுக்காக சாகணும்? ஏய் அண்ணாச்சி!

அண்ணாச்சி: டேய் என்ன சொன்னே? நாக்கு ரொம்ப தடிச்சுப் போச்சா?

நொண்டி: நாக்குமாத்திரம் தடிக்கிலே! உடம்பே துடிக்குது!.. நான் உன் மேலே உள்ள அன்பால சொல்றேன், இன்னம் ரெண்டு கிளாஸ் சாப்பிட்டுட்டு பேசாம தூங்கு! சொக்கியும் நானும் இன்னைக்கு சொர்க்க லோகம் போறதா தீர்மானிச்சுட்டோம்!

அண்ணாச்சி: ரெண்டுகிளாஸ் சாப்பிட்டுட்டு பேசாம தூங்குறதா?

(தொடர்ச்சி 2-ம் பக்கம்

புனித ராஜ்யம்...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

நொண்டி: பரவாயில்லை... பேசிகிட்டே தூங்கு!... இல்லேன்னு தூங்கிக் கிட்டே பேசு!

சுந்தரி: நல்ல ஐடியா?

அண்ணுச்சி: எங்கடாபோயி என்னைத் தூங்கச் சொல்றே?

நொண்டி: அடுப்பங்கரைக்கு போ! வசதியா இருக்கும்.

அண்ணுச்சி: அடுப்பங்கரையில அந்தக் கிழவியிலே படுத்திருக்கா...!

நொண்டி: அதான் சொல்றேன்! உம், இந்த எடத்தை சீக்கிரம் காலிப் பண்ணு!

அண்ணுச்சி: என்ன சொன்னே? கையாலாகாத நொண்டிப் பய; நீ வந்து எனக்கு உத்தரவு போடுறீயா? உன்னை உதைக்க என்மீசைதுடிக்குது—சொக்கி மேலுள்ள ஆசை என்னை அடக்குது! சொக்கியையே கேக்கலாம்— நம்ப ரெண்டு பேருல அவளுக்குயாரைப் பிடிக்குது? இந்த இன்ப இரவை அவள் யாரோடு கழிக்க விருப்புகிருள்னு?

நொண்டி: ஓஸ் நான் தயார்! இப்பவே சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்யலாம். (சொக்கியை அணுகி) சொக்கி! இதோ அண்ணுச்சிஇதோ நான்- எங்கள் இருவரில் நீ யாரைத் தேர்ந்தெடுக்கிருய்? சுயம்வரமண்டபத்தில் நீ தமயந்தி; நான் நளன்!

அண்ணுச்சி: இல்லை...இந்தச் சுயம்வர மண்டபத்தில் சொக்கி; சீதை நான் இராமன்!

நொண்டி: அப்படின்னு வில்லை உடை!

அண்ணுச்சி, அப்பவே சொல்லியிருக்கேன்; வில்லுக்குப்பதிலாஉன்பல்லை உடைப்பேன்.

நொண்டி: என்னடா சொன்னே? [கையை ஓங்கி அடிக்கிருன். அண்ணுச்சியும் நொண்டியைக் கையால் அடிக்கிருன்.]

சுந்தரி: அடடே; வெறுங் கையால சண்டைபோடாதீங்க! அது வன்முறை! இதோ இந்த விறகுக் கட்டைகளை ஆயுதங்களாக ஏந்தி அமைதியாகச் சண்டை போடுங்கள்.

(அண்ணுச்சியும் நொண்டியும்ஆளுக்கு ஒரு விறகுக் கட்டையை வாங்கிக் கொண்டு)

நொண்டி: காதலுக்காக என்னையே பணயமாக வைத்துப் போராடுகிறேன்!

அண்ணுச்சி: இதோ நானும் அதே லட்சியத்துக்காக உன்னை சந்திக்கிறேன் இந்த யுத்தக் களத்தில்!

சுந்தரி: முன் காலத்திலேஎல்லாம் நம்ப தமிழ்நாட்டு வீரர்கள் காளையை வீழ்த்தித் தங்கள் காதலிகளைக் கல்யாணம் செய்து கொள்வார்களாம் — புலியைக் கொன்று அதன் பல்லை எடுத்துத் தாலி செய்து கட்டுவார்களாம் — வீரம் செறிந்த உங்க ரெண்டு பேரையும் பார்க்கும்போது எனக்கு அந்தக் காட்சிகள்தான் ஞாபகத்துக்கு வருது!

அண்ணுச்சி: புலிப் பல் என்ன? இதோ இந்த நொண்டியின் பல்லை எடுத்து உனக்குத் தாலி செய்து கட்டுகிறேன்.

நொண்டி: இதோ உன் தலையை உடைத்து அந்த ரத்தத்தால் சொக்கியின் நெற்றியில் குங்குமம் வைக்கிறேன்.

சுந்தரி: பேசி என்ன பயன்?

காரியத்தில் காட்டுங்கள்! உங்களில் யாராவது ஒரு வெற்றி வீரனை நான் அடைய வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறேன்.

(''அப்படியா?'' என்று ஆர்ப்பரித்தவாறு நொண்டியும்—அண்ணுச்சியும் விறகுக் கட்டையால் மோதுகிருர்கள். கட்டிப்புரளுகிருர்கள். பாலம்மாள் அலறிக் கொண்டு ஓடி வருகிருள் அண்ணுச்சியும், நொண்டியும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே போய் விடுகிருர்கள். சுந்தரி, உற்சாகத்தோடு சிரிக்கிருள்)

பாலம்மாள்: என்னடி இது? இப்படி பண்ணிட்டே?

சுந்தரி: அந்தே' சனியன்கள் தொலைஞ்சுது — தற்காலிகமா நான் உங்களையும் காப்பாத்திட்டேன்! நானும் வர்றேன்; இனி மேலாவது ஊர்ப் பெண்களைக் கெடுக்காம வாழ முடியுமான்னு யோசனை பண்ணுங்க!

[இப்படிச் சொல்லிக் கொண்டே தன்னுடைய சாமான்களை எடுத்துக் கொண்டு பாலம்மாளைக்கும்பிட்டு விட்டு சுந்தரி வெளியே போகிருள்]

பாலம்மாள்: ராம! ராம! ராம!

(என்று கடவுள் படங்களைக் கும்பிட்டுப் பெருமூச்சு விடுகிருள். காட்சி முடிகிறது)

(தொடரும்)

இவர்களெல்லாம் 'தேசிய' விரோதிகளா?

"இந்தியைத் தென்னுடு முழுமையும் எதிர்க்கிறது; எண்ணிக்கையைக் கொண்டு கணக்கிடும் சிறுபான்மையைப் போன்றதல்ல மொழிப் பிரச்சினை. இது நாட்டினுடைய ஒரு பகுதி காட்டும் எதிர்ப்பாகும்' என்று குறிப்பிட்டு, அந்நாள் தலைமையமைச்சர் பண்டித நேருவுக்கு, 1957 ஆம் ஆண்டு ஒரு வேண்டுகோள் அனுப்பப் பட்டது. நாட்டு நலனில் அக்கறை கொண்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெருமக்கள் கையெழுத்திட்டிருந்தனர். அவர்களில் பலர் இன்று உயிரோடில்லாமலிருக்கலாம். ஆனல் இந்தி பற்றி அவர்களெல்லாம் எந்தக் கருத்தினைக் கொண்டிருந்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்;

இருபதாண்டுக்கு முன் அளித்த அந்த வேண்டுகோளில் கையெழுத்திட்டவர்கள் இன்னமும் அதே கருத்தினைத்தான் கொண்டிருக்கிருர்கள் என்பதில் ஐயமில்லை; அவர்களெல்லாம் தி மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பதையும் மனத்தில் கொள்ளவேண்டும்ஆனல்மத்திய அரசின் நிலையிலும் மாற்றமில்லை, நேரு காலம் முதல் மொரார்ஜி தேசாய் காலம் வரை இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று கூறிக்கொண்டே இந்தியைத் திணிப்பதுதான் வாடிக்கையாக இருந்து வருகிறது,

எனவே, அன்று நேருவுக்கு அளித்த வேண்டுகோளை இன்றைய தலைமையமைச்சருக்கும் நினைவுபடுத்த வேண்டிய நிலையிலிருக்கிறோம்.

அந்த வேண்டுகோளில் கையெழுத்திட்டிருந்தவர்கள் பட்டியல் வருமாறு :—

1. சி. பி. இராமசாமி ஐயர் (முன்னுள் துணைவேந்தர்- அண்ணுமலை, காசி பல்கலைக் கழகங்கள்)
2. கே. சீனிவாசன் ஆசிரியர் 'இந்து' ஆங்கில நாளிதழ்
3. டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் திருவாங்கூர் சமஸ்தான உயர்நீதி மன்ற முன்னுள் நீதிபதி
4, சி.இராசகோபாலாச்சாரியார் (இராஜாஜி) முன்னுள் கவர்னர்—ஜெனரல்
5. எஸ். ஜி. மணவாளராமானுஜம் அண்ணுமலைப் பல்கலைக் கழக முன்னுள் துணைவேந்தர்
6. அனந்தராமகிருஷ்ணன் தொழிலதிபர்
7. ஆர். வி. கிருஷ்ண ஐயர் சென்னை சட்டமன்ற முன்னுள் செயலாளர்
8. சி ஆர். சீனிவாசன் ஆசிரியர், ,சுதேசமித்திரன்"
9. ஏ. என். சிவராமன் ஆசியர் 'தினமணி'
10. எஸ். பி. ஆதித்தனுர் ஆசிரியர் 'தினத்தந்தி'
11. எஸ். எஸ். வாசன் ஆசிரியர் 'ஆனந்த விகடன்'
12, டி. சதாசிவம் ஆசிரியர் 'கல்கி'
13 காசா சுப்பாராவ் ஆசிரியர் 'சுயராஜ்யா'
14. வி. எல். எத்திராஜ் வழக்கறிஞர் சங்கத் தலைவர்
15. வி. சி. கோபாலரத்தினம் வழக்கறிஞர் சங்கத் தலைவர்
16. எஸ் எம். ஏ. மஜீத் தென்னிந்திய முஸ்லீம் கல்விச் சங்க கௌரவச் செயலாளர்
17. எப். சுப்பராய ஐயர் விவேகானந்தா கல்லூரி மற்றும் சென்னைத் தொழிற் கழக கரஸ்பாண்டெண்ட்
18. ஆர். கிருஷ்ணமூர்த்தி முதல்வர், பச்சையப்பன் கல்லூரி சென்னை
19. எம். கே சண்முகம் முதல்வர் சர். தியாகராயர் கல்லூரி வண்ணை
20. ரா பி, சேதுப்பிள்ளை தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் சென்னைப் பல்கலைக் கழகம்
21. எம். எம். பட் சென்னைப் பல்கலைக் கழகக் கன்னடப் பேராசிரியர்
22. திருமதி ருக்மணி அருண்டேல் அடையாறு கலாட்சேத்திரம்
23. திருமதி எம். எஸ் சுப்புலட்சுமி பிரபல இசைவாணி
24. டி. கே. சண்முகம்
25. டி. கே. பகவதி தமிழ் நாடகக் கலைஞர்கள்
26. ஏ. ஜி. வெங்கடாச்சாரி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்
27. எஸ் ஆர். வெங்கட்ராமன் இந்திய ஊழியர் சங்கத் தலைவர்
28. கே, கோதண்டபாணி பிள்ளை தமிழ்ப் பண்பாட்டுக் கழகச் செயலாளர்
29: எ. சுப்பையா தென்னிந்திய விவகார ஆய்வுமன்றத் தலைவர்
30. எஸ். நாராயணசாமி ஒய்: எம். சி ஏ. செயலாளர்
31. பி. ஜே. ஆனந்தராஜ் ஒய். எம். சி. ஏ. செயலாளர்
32. திருமதி எல். எ பிதாபதியன் ஒய் டபிள்யூ. சி. ஏ. தலைவர்
33. எச். சி. கோதாரி சென்னை ஸ்டாக் எக்சேஞ்ச் தலைவர்
34. வி எஸ். எல். நாதன் தமிழ் வர்த்தகக் கழகக் கௌரவச் செயலாளர்
35. எஸ். செல்லசாமி ஆட்சிமொழி மாநாட்டுச் செயலாளர்

‘மலைப் பிரசங்கம்’ தேவைதானா?

கற்பழிக்கப்பட்ட மனிதப் பண்புகள் ‘மசக்கை’ டால் மண்ணைத் தின்றுகொண்டிருக்கின்றன. இதயம் உள்ளவன் அதைக் கூடத் தவணை முறையில் விற்பனை செய்துவிட்டான்.

விளைவு! பிணங்கூட இந்த நாட்டில் மரியாதை இன்றித் தூக்கி எறியப்படுகிறது.

ஊரடங்குச் சட்டங்கூடப் பிரேத ஊர்வலத்தைத் தடுத்ததில்லை. சவத்துக்குச் சர்வாதிகாரி கூடத் தலை வணங்குவான். இராணுவம் தன் துப்பாக்கியைத் தலை கீழாகப் பிடிக்கிறது,

அனுதைப் பிணங்களுக்காகவும் அழுகின்ற கண்களைத்தான் இரக்கத்தின் ஏடுகள் என்கிறோம்.

கல்லறை—தத்துவத்தின் தொடக்கம்—இல்லை என்றால் முன்னுரை

கண்ணீர்—உள்ளத்தின் உப்புத் துளிகள்; உறவின் நீர்க் கோடுகள்.

ஆகவே ‘பிரேதம்’’ எப்படியும் வாழ்பவனையும் இப்படித்தான் வாழவேண்டும் என்பவனையும்—ஒரு தடவை ஸ்தம்பிக்க வைக்கும் ‘சிந்தனைத் தூண்டல்’’ ஆகும்

9.12 78 அன்று அண்ணா சாலையில்—தி. மு. கழகக் கண்மணி பாங்கோ ஆறுமுகத்தின் பிரேதத்தை அ. தி. மு க காட்டுமிராண்டிகள் அவமானப்படுத்தி இருக்கின்றனர்.

இது இருபதாம் நூற்றாண்டில் எம். ஜி. ஆர். கட்சியினர் இறுதி ஊர்வலத்திற்கு அளித்த மரியாதை.

செத்தவர் பிணத்தைச் சீராக அலங்கரிக்கும் சாகும் பிணத்தைத்தான் பார்த்திருக்கிறோமே தவிர - சாகும் பிணங்கள் செத்த பிணத்தைத் தின்றதாகச் செய்தி இல்லை.

இங்கே இலைமேய வேண்டிய மிருகங்கள் இறப்பை இரையாக்கி இருக்கின்றன—பிணத்தின் மீது சாராயச் சரங்கள் பாய்கின்றன.

நீதி மன்றத்தாலும் வழக்காலும், சட்டத்தாலும் எதிர்க் கட்சித் தலைவனைச் சந்திக்க இடுப்பில் வலுவற்ற ஆளுங்கட்சி - கல்லறையைக் களமாக்க முயலுகிறது!

மனுக் கொடுத்து வீரம் மடங்கிப் போன முதலமைச்சர் - கமிஷனின் கைச்சரக்கைக் கொண்டு நீதியின் நாணயத்தை மாற்ற முடியாத முதலமைச்சர் பிரேதத்தைத் தாக்கி இன்பத்தில் திளைத்து விடுகிறார்.

எதிர்க்கட்சியினரின் உயிரை ஊதி அணைக்கக் குவிந்த உதடுகள், புழுக்களுக்கு இரையாகப் போகும் பொய்யுடம்பின் மீது ஓர் ‘‘வாட்டர் லூவை’’ உருவாக்கி இருக்கின்றன,

மனிதனைத் தாக்கி மரத்துப் போன கரம் - மரணத்தை முறைத்துப் பார்க்கிறது,

கொலை வெறிக்குக் குத்து விளக்கேற்றி விழாக் கொண்டாடிய கூட்டம்—அணைந்த அகல் விளக்கை உடைக்கிறது!

ஐம்புலனையும் - ஆறறிவையும் ஆமைபோல் சுருக்கிக் கொண்ட பிரேதத்தைத் திட்டினாலும் உறைக்காது. தாக்கினாலும் நோகாதுதான். இருந்தாலும் இறுதி மூச்சை இந்நாட்டுத் தென்றலில் இணைத்து விட்ட தி. மு. க. காரனின் பொய்யுடம்பைப் போருக்கு அழைப்பதன் உள் நோக்கம் என்ன?

இது முதலமைச்சரின் அமெரிக்கச் சுற்றுப் பயணத்தின் திரட்சி மட்டுமல்ல; புரட்சியும் கூட!

இவர்கள் எதிரியின் நிழல் மீதும் நெருப்பைக் கொட்டி - சுடுகிறதா - என்று பார்க்கும் விரக்தி ‘விஞ்ஞானி’கள்

பிணத்தைத் தாக்குவதால் வைதிகனாய் இருந்தால் அவர்கள் மரணத்திற்குப் பின் போகும் ‘மோட்சத்’தின்

கவிஞர் குடியரசு

பாதையையோ—‘நரக’த்தின் ஒற்றையடிப் பாதையையோ தடுத்து விடுகின்ற ‘விதிகள்’’ அல்ல.

பேரறிஞர் அண்ணா நினைவிடத்திலும் மரியாதைக் காகத் தொப்பியை நீக்காத தலையர் - பிணத்தைத் தாக்கியதில் வியப்பில்லை!

இவர்களின் கம்பீரமான வெட்டுப்பாறை நெஞ்சம் எந்த அளவுக்கு எலும்புக் கூடுகளைக் கடித்துத் துப்பும் பசியோடு இருக்கிறது என்பதை அந்தச் சம்பவம் காட்டுகிறது.

சட்டமும் ஒழுங்கும் சத்திரத்தில் தூங்கிக்கொண்டிருக்கும்போது - சமுதாயம் சதுப்பு நிலத்தில் அழுந்தித்தான் போகும்!

மிசா என்ற சர்வாதிகாரக் கருவிகூட — இடுகாட்டை எதிர்க்க எத்தனித்ததில்லை.

முதலமைச்சர் இந்தக் கற்காலப்போர் முறையைத் தொடங்கி வைத்துவிட்டு—நியாயத்தின் வெளிச்சத்தைப் பார்த்தால் கண்கூசும் என்றஞ்சிக் கூட்டுப் புழுவாகிக் காக்கிச் சட்டையின் பின்னால் ஒளிந்து கொள்கிறார்.

போலீசும்—இராணுவமும் சர்வாதிகாரியின் சட்டைகள் தாம். ஆனால் அவை நீண்ட நாள் சுத்தமாக இருப்பதில்லை அழுக்கு உடம்பை அரிக்கின்ற நேரத்தில் அந்தச் சட்டைகள் தாமாகக் கழன்று விடுகின்றன.

காலிகளை தம்பி இருக்கும் அரசாங்கம் நோய் கொண்ட உடம்பு—

இரத்தம் வலுவாக இருக்கும்வரை நோய் நிதானமாகவே இருக்கிறது - சக்தி சரிகிறபோது — நோய் உடம்பையே தின்று உப்பிவிடுகிறது

கத்தியை எடுத்தவன் கத்தியால் காலமாகிறான்;

முதலமைச்சர் சிறைச்சாலையில் குவிக்க வேண்டிய விதைகளை நாட்டில் தூவி விட்டார்.

விளைச்சலை அவர் அறுவடை செய்துதான் ஆகவேண்டும்.

அறுவடை ஆகும் நேரத்தில் அவர் தமிழகத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் — அவர் முகவரிக்கு அந்த விளைச்சல் அனுப்பி வைக்கப்படும்

உலக நியதி ‘‘ஓர் உலகச் சட்டத்தால்’’ (யூனிவர்சல் லா) இயங்குகிறது.

தண்ணீர் ஆவியாகப் போவது சட்டமே தவிர - சந்தர்ப்பம் அல்ல.

இதைப்போல்தான் உலகப் பொருள் ஒவ்வொன்றும் ஒரு சட்டத்தின் வட்டத்தில் சுற்றிக் கொண்டிருக்கின்றன

முதலமைச்சரும் ஒரு பொருள்தான் - அது தன் சட்டப்படி சுற்றுகிறது. அதனுடைய தகுதிக்கேற்ப அதனுடைய முடிவில் மோதிக்கொள்ளப்போகிறது.

முதலமைச்சருக்குப் புத்தி இருக்கும் என்று நம்புவோம். அது இல்லாவிட்டால் காலியான இடத்தில் இந்தக் கட்டுரையை நிரம்பிக் கொள்ளலாம்.

ஒரு பொருள் சக்தி இழந்த நேரத்தில் — அதைத் தாக்கினால் அது அழிந்துவிடவேண்டும். மாறாக அந்தத் தாக்குதலைச் சக்தி இழந்த பொருள் தாக்குப் பிடித்து விட்டால்—தாக்கியது தவிடுபொடியாகிவிடும்.

சில தாவரங்கள் காய்ந்து சருகுபோல் தென்படும். ஒர் ஒரு தூற்றல் தூறினால் போதும் —அது காட்டையே ஒரு சில மணித்துளிகளில் பசுமையாக்கிவிடும்—இந்த இரகத்தைச் சேர்ந்தவர் கலைஞர்

என்னுடைய தலைவன் ‘‘தொடக்ககால பூமி’’ விதைகள் இல்லாமல் தாவரங்களையும்—பால் உணர்ச்சி இல்லாமல் ஜனவிருத்தி செய்து கொண்ட ‘பரிணா எதிர் மயக்கம்’’

அவன் கட்டாந்தரையாக இருக்கிறான் என்று முதலமைச்சர் — தரையை உதைத்தால், உதையின் வேகத்தையே உணவாகக்கொண்டு எரிமலைகள் பிதுங்கி வரலாம்—

இது கவிதை அல்ல—ரசாயான மாறுதல்,

பாம்பு தன் சட்டையை உரிப்பதுபோல் முகத்தின் தோலை உரித்துக்கொண்டு வந்திருக்கும் முதலமைச்சர்! அமெரிக்காவில் மூளைச்சலவை செய்துகொண்டுவந்திருந்தால் நான் சொல்லுவது புரியும்.

கலைஞர் என்பவர் அணு! அணுவையும் அண்டத்தையும்
அளந்த அளவுகோல் இல்லை!

ஆகவே கழகத்தானின் பிணத்தை அடித்து விட்டால்—தோட்டத்தில் புதைந்திருக்கும் பிணங்கள் பேசாது என்று நினைக்க வேண்டாம்:

பிணங்கள் பொய் பேசுவதில்லை.

காலின் கீழே பரந்த பூமி மிதிபடுகிறது என்ற திமிரில்—தலைக்குமேலே கவிழ்க்காத்திருக்கும் வானத்தை அசட்டையாகப் பார்க்க வேண்டாம்.

ஆமாம்! அற்ப அணில் கூடத் தன் பற்களை அடிக்கடி தீட்டிக்கொள்ளும்போது — மழுங்கிப்போன பல்லோடு மறட்புலி புதரில் படுத்திருக்காது.

வெப்பம் காட்டும் கருவி உடைகிற அளவுக்கு வெப்பம் மிகுந்து விட்டால், எப்படி ஆள் பிழைக்க மாட்டானோ—அதனைப்போல் கொலைகொள்ளை கற்பழிப்பு வரம்பை மீறி விட்டன, இனி சமுதாயம் பிழைக்க வேண்டும்.

கழகத் தோழர்கள் இனி ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வாழ்ந்தது போதும் என்ற மன நிறைவு வந்தாக வேண்டும் எஞ்சி இருக்கிற நாட்கள் எதற்காக என்ற முடிவுக்கு வரவேண்டும்.

எதிரி ஈனனாக இருக்கிறான்: இன்னும் மலைப் பிரசங்கம் தேவைதானா?

இரண்டு கன்னத்தையும் திருப்பிக் காட்டியாகி விட்டது கன்னம் வீங்கியதுதான் மிச்சம்!

அதோ பார்! அந்தப் பசு தன் மீது உட்கார்ந்த ஈயையும் வாலால் அடித்து ஓட்டுகிறது,

கிளிக்கும் கழுகைப்போல் அலகு வளைந்திருக்கிறது, முள்ளைக் கண்டு அஞ்சுபவன்—ஏன் ரோஜாவாகப் பிறக்க வேண்டும்!

கரையை மோதத் தெரியாதவன்—கடலாக ஏன் விரிய வேண்டும்.

வாழ்க்கை என்பது சிரிப்பு மட்டுந்தானா?—வீரம் இல்லையா—கோபம் இல்லை,

இன்றே முடிவெடுங்கள்!

கொசுத் தொல்லை அதிகமாகிவிட்டது. வலை பின்னுங்கள்!

ஏழைக்குக்கிட்டுமா அந்த விளக்கு?

★

ஏழை மக்களுக்கென்று தீட்டப்படும் சட்டங்கள் அனைத்தும் இந்தியாவில் ஏட்டளவிலேயே இருக்கின்றன என்பதை நினைக்கும்போது வேதனைப்படுவதா அல்லது வெட்கப்படுவதா என்றே தெரியவில்லை.

‘ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி’ வழங்குவது பற்றிய ஒரு கருத்தரங்கு அண்மையில் டில்லியில் நடந்தது. அக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய உச்ச (சுப்ரீம்) நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட், ‘‘ஏழைகளுக்கு இலவசமாக சட்ட உதவி வழங்கவேண்டும் என்று பேசப்படுகிறதே தவிர, இதற்காக மத்திய - மாநில அரசுகள் எதையும் செய்யவில்லை. இதற்காக நிதியுதவி எதையும் அரசு அளிக்கவில்லை மூத்த வழக்கறிஞர்களும் இதில் ஆர்வம் காட்டுவதாகத்தெரியவில்லை. இலவசச் சட்ட உதவித் திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டும். இதற்கு உச்ச நீதிமன்றமும், மூத்த வழக்கறிஞர்களும் வழிகாட்டிகளாக விளங்கவேண்டும். ஏழைகளின் வழக்குகளை இலவசமாக விசாரிக்க உச்ச நீதிமன்றத்தில் வாரத்தில் இரண்டு நாட்கள் ஒதுக்கவேண்டும்’ என்று குறிப்பிட்டார்.

‘சட்டம் ஓர் இருட்டறை—அதில் வக்கீலின் வாதம் ஒரு பிரகாசமான விளக்கு—அந்த விளக்கு ஏழைகளுக்கு எட்டாதது’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முப்பதாண்டுக்கு முன்பு கூறினார். அந்த நிலைமைதான் இன்னும் நீடிக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு, நீதிபதியின் இந்தப் பேச்சு.

நீதிபதியின் இந்தச் சீரிய கருத்திற்கு செயல் வடிவம் கொடுக்க அரசு முன்வருமா?

விசாரணைக் கமிஷன்கள்

நாளிதழ்களில் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் பற்றிய செய்திகள் தினம் வரத்தவறினாலும் தவறலாம், கமிஷன்கள் அமைப்பதுபற்றியசெய்திகள் வரத்தவறுவதில்லை. அந்த அளவுக்கு இன்று இந்தியர்களின் இரத்தத்தோடும், மானத்தோடும் பின்னிப் பிணைந்து, இணைந்து கலந்து காணப்படுபவைகள் இவ் விசாரணைக் கமிஷன்கள். இவைகள் போடப்படுவதற்கு வெளிக்காரணங்கள் ஆயிரம் இருக்கலாம். ஆனால் உட்காரணங்கள் இரண்டுதான் உள்ளன.

ஒன்று கமிஷன்போடுபவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வது! மற்றது, தங்களை நிரந்தரமாகக் காப்பாற்றிக் கொள்வது! அதாவது அதற்காக மற்றவர்களை நிரந்தரமாகத் தலைதூக்க விடாமல் செய்வது.

துப்பாக்கிச்சூடு நடத்த காரணம் என்ன? தடியால் மண்டையில் அடித்து அதனால் தடி உடையக்காரணம்என்ன? கலவரம் மூளக் காரணம் என்ன? அதனால் ஏற்பட்ட நிலவரம் என்ன? என்பதெல்லாம் முன்னதற்கு உதாரணங்கள் இந்தக் காரணங்களுக்காக ஒரு கமிஷன் போடுவார்கள். மூன்று மாதம் மும்முரமாக விசாரிப்பார்கள். முடிவில் 'செய்தது சரிதான்' என்பார்கள்.

கமிஷன்போடும்பொழுதே எல்லோருக்கும் இம்முடிவு. வெட்ட வெளிச்சமாகத் தெரியும். ஆனாலும் துவக்கத்தில் நாள்தோறும் ஆர்வமாக, மும்முரமாக நாளிதழைப் படிப்பார்கள். இம்மாதிரி கமிஷன்களால் அரசுகள் தங்களைக் காப்பாற்றிக் கொள்கின்றன. தற்காலத்தில் இதுபோன்ற கமிஷன்கள் மிகச் சாதாரணமாக ஆகிவிட்டன. அதற்கான அவசியமானகாரணங்கள்கூட இன்று அவ்வளவு மலிவாக ஆகிவிட்டன.

எந்தக் காரணத்துக்காவது இதுபோல கமிஷன் போடுகிறார்கள் என்றாலே, ஏதோ ஒரு பெரிய தவறு நடந்துவிட்டது என்றுதான் பொருள்! இதற்கென்று தனியே ஒரு விசாரணை தேவையே இல்லை. எங்கே மக்கள் உண்மையைத் தெரிந்து கொள்வார்களோ எனப் பயந்து, அதை மறைக்கவே கமிஷன் போடுவார்கள். இந்த மக்களும் கமிஷன் போட்ட உடனேயே உண்மை எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள். கமிஷன் மூலமாகத்தான் உண்மை வெளியாகப் போகிறதே என எண்ணி அமைதியடைந்துவிடுவார்கள். இது இவர்களின் பரம்பரைப் பழக்கம்.

அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்காக அமைக்கப்படுபவை இரண்டாம்வகை கமிஷன்கள், இவை தற்காலத்தில் மிக வேகமாக பரவி வருகின்றன. இதில் கமிஷன் அமைப்பவர்கள் 'ஆளுவோர்'! கமிஷனுக்கு உட்படுபவர்கள் 'ஆண்டவர்'கள்; இனி ஆள இருப்பவர்கள். இந்த இரண்டாவது காரணம்தான் (ஆள இருப்பவர்கள்) அவர்கள் மீது கமிஷனையே போடவைக்கின்றது.

ஒரு தொடர்கதை..!

இதில் சாட்சி சொல்பவர்கள் பெரும்பாலும் அரசு உயர் அதிகாரிகள். முன்பு ஆண்டவர்களிடம் கையைக் கட்டிக் கொண்டு அத்தனைக் காரியங்களும் நடைபெற, ஆலோசனை கூறிய கர்த்தாக்கள்! இப்பொழுது அவ்வாறு நடந்தது தவறு எனக் கமிஷன் போடக் காரணமாக இருப்பவர்கள்!

முன்பு 'காட்சி' நடத்திக் கொண்டிருந்தவர்கள், இன்று 'சாட்சி' சொல்லிக் கொண்டிருப்பவர்கள். எதிர்காலத்தில் கூப்பிட்டாலும் வருவார்கள். அவர்களுக்குச் சாதகமாகவு சொல்லுவார்கள்! எந்த நிகழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணமானவர்கள். ஆனால் எப்பொழுதும் 'அப்ருவர்'கள்!

இவர்களின் சாட்சியங்கள் தான் கமிஷன் போட்டதற்கான நோக்கத்திற்கு உயிர் நாடி அதைத்தடையில்லாமல் நிறைவேற்றித் தருவார்கள். மிகவும் நல்லவர்கள்! ஆமாம் கமிஷன் போட்டவர்களுக்கு! இவர்களை நம்புவது, முன்பு ஆண்டவர்களுக்குமட்டுமல்ல; இப்பொழுது ஆளுவோர்க்குக் கூட ஆபத்தானதுதான்!

வீரசோழன்

ஏனென்றால்எந்தக்கட்சிஆட்சி மாறினாலும், இவர்கள் கட்சி மாறவேமாட்டார்கள் ஆமாம் இவர்கள் எப்பொழுதும் ஒரே கட்சிதான். அதுதான் ஆளுங் கட்சி!

இதுபோன்ற கமிஷன்களுக்கு விசாரிக்கும் பொறுப் பேற்பவர்கள் பெரும்பாலும் ஓய்வுபெற்ற நீதிபதிகள்தாம். அவர்கள் ஓய்வுபெற்றபின்பும் ஒப்பந்தத்திற்கு உட்படுபவர்கள். போகிற போக்கைப் பார்த்தால் போடப்படும் கமிஷன்களின் எண்ணிக்கைக் கேற்றவாறு, ஓய்வு பெற்ற நீதிபதிகள் கிடைப்பதே கடினமாகி விடும் போலிருக்கிறது! அவசியமேற்பட்டால் இருக்கின்ற நீதிபதிகளையேகட்டாய ஓய்வு கொடுத்துக் கமிஷனில் நியமிக்கலாம்!

கமிஷன்களுக்குப் பெயரிடுவதில் இப்பொழுது எந்த விதமான சிரமமும் இல்லை. விசாரிப்பவரின் பெயரையோ அல்லது அவரின் சாதிப் பெயரையோ இட்டு விடுகிறார்கள். இதில்கூட சிலபேருக்கு குறை. என்ன இது? 'ரெட்டி கமிஷன்,' 'நாயுடு கமிஷன்' மட்டும்தானா? 'செட்டியார் கமிஷன்'கிடையாதா? எனக்கேட்கிறார்கள். இதற்கு ஒரு வழி செய்யலாம். பிரதமர் பதவிக்குச் சொன்னதுபோல் சுழற்சி முறையில் (Rotation) எல்லா இனத்தாருக்கும் இதில் இடம் கொடுக்கலாம்.

கமிஷன்கள் பல இடங்களில் நடப்பதால் பலருக்கும் சிரமமாக உள்ளது. சஞ்சய் காந்திபோல ஒருவரே சில சமயங்களில் பல கமிஷன்களுக்கு உட்பட வேண்டியதாகிறது. இச்சிரமங்களைக் குறைக்க எல்லாவற்றையும் ஒரே காம்பவுண்டிற்குள் வைத்துக் கமிஷன் கட்டிடம் எனப்பெயரிடலாம்.

சில சமயங்களில் கமிஷன் போட்டவர்களின் விருப்பத்துக்கு மாறாகக்கூட தீர்ப்பினை வழங்குவதுண்டு. கமிஷனின் வரலாற்றுக்கே களங்கம் கற்பிப்பதுபோன்ற இந்நிகழ்ச்சிகள் சில சமயங்களில் 'அத்தி பூத்தாற்போல' நடப்பதுண்டு.

கமிஷன்கள் மிகப் பொல்லாதவை. 'வரங்கொடுத்தவன் தலையிலேயே கை வைக்கும்' தன்மையில் கை வந்தவை. அது யாரையும் விட்டுவைப்பதில்லை.

இன்றைக்குக் கமிஷன் போடுபவர்கள். நாளைக்குக் கமிஷனுக்கு உட்படுபவர்கள் இது சரித்திரம்!

1976-ல் தி மு. க. அமைச்சர்கள் மீது கமிஷ்ன் போட்டவர் இந்திரா காந்தி; 1977-ம் ஆண்டு இந்திராவே கமிஷனுச்கு உட்பட்டார்! போட்டவர் மொரார்ஜி! 1978-ல் மொரார்ஜி மீது கமிஷன் போட வேண்டுமென ராஜ் நாராயணனும் மற்றவர்களும் சொல்கிறார்கள். கமிஷன்கள் சுற்றிச்சுற்றி வரும் விஷச்சக்கரங்கள்! இதை அனைவரும் உணர்தல் வேண்டும்.

ஆகவே கமிஷன்கள் போடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் அல்லது குறைக்க வேண்டும், கமிஷன் போடுவதை நிறுத்துவது எப்படி என்பதை ஆராய ஒரு கமிஷன் போடுவதுதான் அதற்குச் சிறந்த வழி!



இந்திக்கு உள்ள தகுதி என்ன?

ஆங்கிலம் உலகமொழி என்பதை யாவரும் ஒப்புக்கொண்டாகிவிட்டது. 150 மைல் கடற்கரை யுள்ள நாட்டினராகிய நாம்—உலக மொழியைக் கற்று ஏற்கவும் தகுதியும் அவசியமும் உடையவர்கள் அல்லவா? எனவே நான் ஆங்கிலமொழியின் அவசியத்தைப்பற்றி வற்புறுத்திக் கூறுவதைப் பழைமை விரும்பிகளான காங்கிரசார்கள் தவறாகக் கருதுவதில் அதிசயமில்லை, அதனால் நாம் தமிழ் மொழியை இகழ்வதாகவும் கருதக் கூடாது.

ஆங்கிலத்தில் விஞ்ஞான அறிவு அறவே கலந்துவிட்டது; புதிய உலகுக்கான வழிவகைகள் அதில்தான் மலிந்து கிடக்கின்றன. இதை எவரும் மறுக்க முடியாது, ஆங்கில ஏகாதிபத்திய முறையை நாம் வெறுக்கும் மனப்பான்மை கொண்டிருந்தோமேயன்றி ஆங்கில மொழியை வெறுப்பதல்ல. வடநாட்டு இந்தி மொழியைக் கூட நாம் வெறுப்பது—வடநாட்டவர்களின் ஆதிக்கம் மீதுள்ள வெறுப்பால் என்று எவரும் கருதக் கூடாது. அம்மொழியிலிருந்து மக்களின் நல்வாழ்வுக்காகத் தெரிந்து கொள்ளக் கூடிய ஒரு சிறு எடுத்துக் காட்டாகிலும்—தமிழில் இல்லாத எதையாகிலும் இந்தியில் காட்ட முடியுமா? கூற முடியுமா? நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் காங்கிரஸ் ஏடுகள்—இத்தனை காலம் ஆங்கில மொழிக்கு அடிமையாக இருந்து வந்த வீரர்கள், இன்று இந்தியை எதிர்க்கிறார்கள்—வெட்க மற்றவர்கள்' என்று எழுதி என்னைக் கேலி செய்தனர் அதற்காக இதைச் சொல்லுகிறேன்.

நாம் ஆங்கிலம் கற்கா விட்டால் உலக மக்களோடு கலந்து வாழ முடியுமா? ஏன்? அம்மொழியின் ஆற்றல் அவ்வளவு; ஆங்கிலம் கற்றதினால் பல நிபுணர்கள், அறிஞர்கள் புத்துலகச் சிற்பிகள் தோன்றினார்கள். நாம் சரித்திர வாயிலாக இன்றும் நேரடியாகக் காண்கிறோம். ஆனால் இந்தி மொழி கற்றவர்களில் எவர் அறிஞராய், முற்போக்குடையோராய் திகழ்கின்றனர் எனக் கேட்கிறேன். மத வெறி பிடித்த பழைமை விரும்பிகள்தான் இருக்கிறார்களேயன்றி வேறில்லை. இன்னும் கூற வேண்டுமானால் அம்மொழி காந்தியாரைக் கொன்ற கோட்சேக்களைத் தான் உற்பத்தி செய்திருக்கிறது.

நான் ஒரு மொழியை வெறுப்பதோ வரவேற்பதோ அந்தந்த நாட்டுக்காரன் என்றஉணர்ச்சியாலல்ல, அம்மொழியைக் கற்றால் மக்கள் சமுதாயத்திற்கு என்ன பலன் ஏற்படும். என்ன இலாபம் கிடைக்கும், என்பதையே முக்கியமாகக் கருதுபவன். நான் ஒரு பகுத்தறிவு வாதி. நிபந்தனையற்ற முற்போக்குவாதி. அந்த நிலையிலிருந்துதான் நான் ஆங்கிலத்தைப்பற்றி என் உள்ளக் கிடக்கையை ஒளிவு மறைவின்றிக் கூறினேன். நீங்கள் ஏற்க வேண்டுமென்றல்ல; சிந்திக்க வேண்டும் என்பதற்காக. நம் நாட்டைப் பொறுத்தவரை நம் தமிழ் மொழியையும் இனிப்புலவர் பெருமக்கள் ஆங்கிலப் புலவர்கள் போல் முற்போக்குப் படைத்த அறிவுக் கண்கொண்டு வளர்க்க வேண்டும். மதம், சமுதாயம், நாடு என்பன பற்றிய பழைமையை மறக்க வேண்டும். பழைமையில் சிக்கிக் கிடக்கும் ஒரு சில பண்டிதர்களுக்கும் இதை நினைவூட்டுகிறேன், பழைமைக்காக நாம் வாழவில்லை! பழைமையைத் தேடவோ. இறுக்கப் பிடிக்கவோ எற்பட்டதல்ல நம் அறிவு.

பெரியார்.

14-8-48 ல் சென்னையில் ஆற்றிய சொற்பொழிவு

தமிழ்நாட்டு 'இடி அமீன்' நடத்திய

அண்ணாயிச தர்பார்

"ஆடம்பர வரவேற்புகளையோ, ஊர்வலத்தையோ ஏற்றுக் கொள்ளும் உணர்வில் இல்லை''

தமிழக அரசியலரங்கில் ஓர் இடி அமீன் இல்லாத குறையைத் தீர்த்து வைக்கவே 'ஜனித்த' எம். ஜி. இராமச்சந்திரன் தன்னுடைய 'இரத்தத்தின் இரத்தங்களுக்கு' விடுத்த வேண்டுகோள் இது.

'இரப்பர் ஸ்டாம்பாக' செயல்படுவதில் ஈடு இணையற்ற திறன் காட்டி வருபவரும் —'நடமாடும் பல்கலைக் கழகமாக' இருந்த பெருமையெல்லாம் கனவாய், பழங்கதையாகப் போக, இன்று அரசியல் அரிச்சுவடி கூட அறியாதவராகக் கற்றுக்குட்டித் தனமாகப்பிதற்றி வருபவருமான — நாவலர் நெடுஞ்செழியன் தன்னுடைய 'தானைத் தலைவனை'ப் பின்பற்றித் தானும் ஓர் அறிக்கை விட்டுள்ளார்:

'தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கடும் புயலும், பெரு வெள்ளமும் தமிழகப் பகுதிகளையும் இலங்கையின் பகுதிகளையும் பெரிதும் பாதிக்கின்ற இந்த நேரத்தில் தாம் தாயகத்திற்கு வந்து சேரும்போது ஆடம்பரமான ஊர்வலமோ, ஆடம்பரமான வரவேற்போ தமக்கு ஏற்பாடு செய்யவேண்டாம் என்று கழகக் கண்மணிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்...''

—தமிழர்களால் புறக்கணிக்கப்பட்ட 'விலக்கப்பட்ட கனிகளான' இந்த இரண்டு 'ரெடிமேடு' தலைவர்களின் வேண்டுகோள் 'அண்ணா' நாளிதழில் வந்துள்ளது. இந்த நாளிதழின் நிறுவனர் யார் தெரியுமோ? சாட்சாத் மருதூர் கோபால ராமச்சந்திரமேனனேதான்— புரியவில்லையா? எம்.ஜி, ஆர். தான்!

முதல் பக்கத்தில் இந்த வேண்டுகோள் — நான்காவது பக்கத்தில் இரத்தத்தின் இரத்தங்களுக்கு' அபின் செலுத்தும் வேண்டுகோள்;

''அனைத்திந்திய அண்ணா தி மு. கழகத்தின் அடலேறுகளே!

ஆற்றல் அரசர்களே!
கோடி கோடி குரல்கள் ஒலித்திட கோடி கோடி புயங்கள் உயர்ந்திட. கோடி கோடி கரங்கள் அசைந்திட கோடி கோடி விழிகள் மலர்ந்திட கொடியோடு படையோடு கூடிடுவோம்''

—ஒரு பக்கம் ஆடம்பரமான வரவேற்பு வேண்டாமென்ற வேண்டுகோள்-இன்னொரு பக்கம் 'கோடி கோடியாகத் திரண்டு வாரீர்:...'' என்ற வேண்டுகோள், அரசியலில் இம்மாதிரி மலிவான 'ஸ்டண்ட்' அடிக்க எம். ஜி. ஆரைவிட்டால் வேறுயாரால் இயலும்?

விளம்பரம் என்றாலே பிடிக்காதாம் எம். ஜி. ஆருக்கு...! ஆனால் இம்மாதம் ஒன்பதாம் தேதி சென்னை மாநகரின் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த 'போஸ்டர் களைப் பார்த்தவர்கள் மூக்கின் மேல் விரலை வைத்திருப்பார்கள்.

புனித புத்தர், ஏசுவின் மறு அவதாரம் இரண்டாவது மகாத்மா காந்தி, மார்க்சையும் மிஞ்சிய தத்துவ வித்தகர் எல்லா 'போஸ்டர்'களிலும் எழுந்தருளியிருந்தார்...ஆளுயரத்தில்—பல வண்ணங்களில் பெரிய பெரிய எழுத்துக்களில் ஏராளமாக அடிக்கப்பட்டிருந்த அந்த 'போஸ்டர்' களுக்கான செலவைக் கொண்டு எத்தனையோ பசித்த வயிறுகள் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்காவது 'வாழ்க்கை ஓட்டியிருக்க முடியும்...

அலங்கார பேனர்களில் எழுதப்பட்ட வாக்கியங்களின் பொருள், அவ்வாக்கியங்களைத் தயாரித்துக் கொடுத்தவருக்கே புரிந்திருக்குமோ என்னவோ... உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்.

"வெளிநாட்டுத் தொழில் அறிவை விழி மூலம் கொண்டு வரும் புரட்சித் தலைவரே வருக... வருக...!''

—இதனுடைய பொருள் நிச்சயமாக நமக்குப் புரியவே இல்லை... நம்முடைய புத்திக்குப் பட்டதெல்லாம் எந்த அறிவையும் மண்டைக்குள் தான்— அதாவது மூளையில் தான் தேக்கிக் கொள்ள முடியும் என்பதுதான்! மேற்படி இடம் 'காலி' என்பதால் தொழில் அறிவை விழி'யிலேயே புரட்சியார் தேக்கிக் கொண்டாரோ என்னவோ.

அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தின் அடலேறுகளாலும் ஆற்றல் அரசர்களாலும் சென்னை மாநகர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல!

'இரத்தத்தின் இரத்தங்கள் தங்களின் 'வண்டு துளைத்த இதயக்கனியை' வரவேற்பதற்காக ஆடிய கூத்துக்களால் அண்ணாசாலையில் போக்குவரத்தே செயலற்றுப்போனது பொதுமக்களின் நலத்தைத் துச்சமெனக் கருதி அவர்களுக்குத் தொல்லைகள்தருவதையே பாலிசியாகக் கடைபிடித்து வரும் அ. தி, மு. க. வினரின் தூண்டுதலால் அண்ணாசாலை வழியாகச் செல்லும் பஸ்கள் அனைத்தையும் வேறுபக்கம் திசை திருப்பிவிட்டனர் போலீசார்.

ஆனால் —

அ. தி. மு. க. கொடி கட்டியிருந்த கார்களும், ஜீப்புகளும் சென்றபோது மட்டும் கண்களை மூடிக்கொண்டனர்.

அ தி. மு. க. வினர் தாங்கள் அநாகரிக அரசியல்வாதிகளே'என்பதை பச்சை குத்திக்கொண்டபோது மட்டும் நிரூபிக்க வில்லை... தாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது என்பதற்காகத் தொடர்ந்து 'காட்டு மிராண்டித் தனமாகவே செயல்பட்டு வருபவர்கள்...

தி.மு.க. தோழர் பாங்கோ ஆறுமுகத்தின் சடலத்தைப் பிணவண்டியிலிருந்து தூக்கி எறிந்து தி.மு.க.கொடியையும் தீ வைத்துக் கொளுத்தியதன் மூலம் சிலருக்குக் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேகத்தையும் தீர்த்து வைத்தார்கள். ஆம், சந்தேகமில்லாமல் அ.தி.மு.க. வினர் காட்டுமிராண்டிகளே!

கொடுத்துக் கொடுத்துத் தேய்ந்து போன கரத்தை ஆட்டிக்கொண்டே கீழிறங்கிய உலக மகா வள்ளல் எம், ஜி. ஆரின் பொற் பாதங்கள் மண்ணில் பட்டவுடனே—

'கியூ' வரிசையில் நின்றிருந்த மந்திரிகள் 'தடால் தடால் என்று மண்டியிட்டு விழுந்து அவர் பாத துளியை சிரமேற்கொண்ட காட்சி 'ரொம்ப ரொம்ப தமாஷாக இருந்தது...

காலைதொட்டுஆசீர்வாதம் பெற வாய்ப்புக் கிட்டாது போன பிறர் பிறவிப்பயனைப் பறிகொடுத்தவர்களாக முகம் சோர்ந்து போனார்கள். எல்லா

அப்துல்ஜாகீர்உல்லா

வற்றிற்கும் மேலாக முன்னாள்துணைவேந்தர் சிட்டிபாபு, எம். ஜி. ஆரின் பாதம் தொட்டுக் கும்பிட்டு கல்வித் துறைக்கே மாபெரும் கீர்த்தியைத் தேடித் தந்துவிட்டார்!

ஆயிரம் ரூபாய் விலையில் ஆள் உயர சம்பங்கி மாலை வாங்கிவந்து ரசிகர் ஒருவர் போட்டதையும் ஆனந்தமாக ஏற்றுக்கொண்டாராம் ஆடம்பர வரவேற்பை விரும்பாத புரட்சி முதல்வர்!

தொடரட்டும் இந்த அண்ணாயிசத் திருவிளையாடல்கள்!

ஐம்பதாண்டுகளுக்கு முன்பே

இந்தியை எதிர்த்துப் பெரியார் எழுதியது!

இந்தியாவுக்கு ஒரு பொதுப்பாஷை வேண்டுமானாலும் ஆங்கில பாஷையைத் தெரிந்தெடுத்து அதை எல்லா மக்களிடையிலும் பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல் வேறு பாஷையைப் பற்றி யோசிப்பது முட்டாள் தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும். இங்கிலீஷ் உலக பாஷை. உலக வியாபாரப் பாஷை. இந்திய அரசாங்க பாஷை.

இதுமாத்திரமல்லாமல் மூடப் பழக்க வழக்கமும் பார்ப்பனியமும் இல்லாமல் அவ்வளவும் அறிவு அடிப்படையான விஷயங்கொண்ட பாஷையாகும். இவைகள் மாத்திரமல்லாமல் இந்தி, உருது முதலிய பாஷைகளை தாய் பாஷையாகக் கொண்ட துருக்கி பாஷைகூட இங்கிலீஷ் பாஷைக்கும் இங்கிலீஷ் எழுத்துக்கும் மதிப்புக்கொடுத்துதனது தாய்பாஷையை மாற்றிவிட்டது அன்றியும் நமது இங்கிலீஷ் அரசாங்கம் உள்ளவரை — மேல்நாடுகளின் வியாபார சம்பந்தமோ, கலை சம்பந்தமோ கல்வி சம்பந்தமோ உள்ளவரை — இங்கிலீஷ் இல்லாமல் முடியாது. இப்படியெல்லாம் இருக்க சற்றும் கவனியாமல் இப்போது தமிழ்நாட்டில் இந்தி பாஷை பரப்ப வந்திருப்பதென்பது தற்காலம் தமிழ்நாட்டில் உள்ள உணர்ச்சியை ஒழிக்கச் செய்யும் சூழ்ச்சியே ஆகும்.

—(20—1—1929 குடியரசு இதழில் பெரியார் எழுதியது)

M. K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ணா மடம்சாலை, சென்னை-28
றதியுமள்ள ஆண் —பெண் கேன்வாசர்கள் தேவை.

கருணாநிதி

"டைரக்டர் சார்! பணத்தைப் பற்றிக் கவலையே இல்லை — உங்கள் இஷ்டத்துக்கு செட்டுகள் போட்டுக் கொள்ளலாம், - ஸ்டுடியோவுக்குள் அமெரிக்காவின் கட்டிடங்கள்வரவேண்டுமா? மாஸ்கோவின் தெருக்களை அமைக்க வேண்டுமா? கடல் ஒன்று காட்டவா? ககனத்தையே அழைக்கவா? மழையா? புயலா? பூகம்பமா? எதுவேண்டுமானாலும் என்ன செலவானாலும் சரி—படம் பெரிய படமாக இருக்க வேண்டும். பெரிய படம் என்றால் நாற்பதாயிரம் அடியோ அல்லது சினிமாஸ்கோப் மாதிரியோ அல்ல சார்! ஒரு வருஷத்துக்கு ஒரு ஊரிலே ஓடவேண்டும்! இந்தப் படத்தைப்பற்றிப்பேசாதவர்கள் பிறக்காதவர்களாகத்தானிருக்க வேண்டும்! வசூல் மட்டுமல்ல லட்சியம்! அருமையான கதை! ஆபூர்வமான வசனம்! அற்புதமான டைரக்ஷன்! அநாயாசமான நடிப்பு! அமோகமான கூட்டம்! இப்படி ஒரேபரபரப்பு நாட்டிலே ஏற்படவேண்டும். நான் இந்தப் படத்தைப் பணம் சம்பாதிப்பதற்காக எடுக்கவில்லை. இதில் வரும் லாபம் முழுவதையும்நாலைந்து கல்லூரிகள் கட்டுவதற்குச் செலவிடப்போகிறேன். உங்களுக்குப் பிடித்தமான எழுத்தாளரையே ஏற்பாடு செய்துவிட்டேன். முற்போக்குஎண்ணத்தோடு எழுதுவதில் அவருக்கு நிகர் அவரேதான். அரைக்கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கிவிட்டேன். நடிக, நடிகையர் தேர்தல். படப்பிடிப்பு உடனே ஆரம்பமாக வேண்டும்.''

பட முதலாளி பரமசிவானந்தம் முற்போக்கு எண்ணங்கொண்டவர். நல்ல கருத்துள்ள படங்களை மக்களைத் திருத்தும் வகையில் வெளியிடவேண்டுமென்ற அவா அதிகமுடையவர். படம் எடுத்துத்தான்பணம் சம்பாதிக்க வேண்டும் — வாழ்வு நடத்தவேண்டும் என்ற நிலையிலே உள்ளவருமல்ல; பணத்தை அளவுக்குமேல் குவித்து அழகு பார்க்கும் கருமித்தனமுடையவருமல்ல வள்ளல் தன்மையும் அதே நேரத்தில் நாட்டுக்குத் தேவையான எண்ணங்களைக் கலைகள் மூலம் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்ற கொள்கையும் பெற்றவர். பல இலட்ச ரூபாய்க்குச் சொந்தக்காரரான அவர், உலகத்தையே ஒரு கலக்கு கலக்கக் கூடிய ஒப்பற்ற பெரும்படம் ஒன்றை எடுப்பதற்காகத் தன் சொத்தில் பெரும் பகுதியான ஐம்பது இலட்ச ரூபாய்களை முதலாக வைத்தார். ஸ்டுடியோ ஒன்றைத் தனியாக அமைத்தார் படம் வசதியாக எடுப்பதற்காக! மிகப் பிரசித்திபெற்ற டைரக்டர் ஒருவரும், மக்களிடம் செல்வாக்குப் பெற்ற வசனமேதை ஒருவரும், புதுமைக் கவிஞர் ஒருவரும் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். தன்னுடைய நல்ல உள்ளத்தைப் பட முதலாளி, அவர்களிடம் திறந்து சொல்லிவிட்டார்; அவர்களும் அகிலம் வியக்கும் அறிவுக்கதையொன்றை அழகான பாடல்களுடன் தயார் செய்து விட்டனர்.

படப்பிடிப்பு ஆரம்பமானது. புகழ் வாய்ந்த நட்சத்திரங்கள் ஒருவர் பாக்கியின்றிப்படத்தில் நடித்தனர். நாடெங்கும் அந்தப் புதிய படத்தைப் பற்றியே பேச்சு. "எப்போது வெளிவருமோ?' என மக்கள் ஏங்கி நின்றனர். ஐம்பது இலட்சம் ரூபாயும் கரைந்து, படப்பிடிப்பு வேலை ஏறத்தாழ ஒரு கோடியை எட்டிப்பிடித்துப் படமுதலாளி சில இடங்களில் கடன் வாங்கிப் படத்தின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தினர். படம், இதுவரையில் யாரும் வெளியிடாத அந்த அளவு உயரிய முறையில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்தது! யாரும் துணிந்து சொல்ல முடியாத புரட்சிக் கருத்துக்களை. நாகரிகமான முறையிலும், ஆபாசமற்ற தன்மையிலும் அந்தப்படம் விளக்குவதாயிருந்தது. தொழிலாளர் உயர்வுக்கானவழிகள் — சாதிபேதமற்ற சமுதாயம் — கடவுள் பெயரால நடைபெறும் கயமைச் சேட்டைகள் — கலையின் பெயரால் நிகழும் ஆஷாட பூதித் தனங்கள் — மதம், மக்கள் சமூகத்தை எப்படி பாழ்படுத்துகிறது என்ற விளக்கம் — இத்தனையும் அடங்கிய ரத்தினமாக அந்தப் படம் அமைந்து விட்டது! நடிப்பு ஆகா இதயத்தின் துடிப்பு! கதை வாழ்வின் ஒளி! வசனம் ஜீவகாவியம்! பாடல்கள் தேன்பாகு கற்கண்டு! டைரக்ஷன் பாராட்டவே இயலாது! அத்துணை சிறப்பு—அத்துணை சிறப்பு!

படம் ஆயிரம் ஆயிரம் அடியாக வளர்ந்ததிலிருந்து அது பதினாயிரம் அடிகள் வளரும் வரை தினந்தோறும் படமுதலாளி அதைப் பார்த்துப் பார்த்து ரசிப்பார்! தேசமெங்கும் புகழக்கூடிய ஒரு பெரிய படத்தை அளிக்கப் போகிறோம் என்ற ஆனந்தம் அவரை ஆட்கொண்டது. நண்பர்கள் வருவார்கள்; படத்தைக் காட்டுவார்! மகிழ்வார்கள்; பாராட்டுவார்கள்.

ஒரு சிலர் மட்டும், 'சிறப்பான படந்தான் — ஆனல் சென்சார் ஆகுமா?'' என்று சந்தேகத்தோடு கேட்பார்கள். அதைப் பற்றிக் கவலையே இல்லை என்பார் பட முதலாளி "இப்போதென்ன அக்கிரமமான விஷயத்தையா படத்தில் சொல்லிவிட்டோம்? செக்ஸ் அப்பீலா இருக்கிறது? அல்லது ஆபாச வசனமா? மறுக்கக்கூடிய விஷயம் என்ன இருக்கிறது? புராணப் படங்களில் வரும் ஆபாசங்கள் எதுவும் இதிலே கிடையாதே! தாரா சசாங்கத்தைப் போலவா படம் எடுத்திருக்கிறோம்? இல்லையே சென்சார் எதற்காகத் தலையிடப் போகிறார்கள்' என்று ஆத்திரமாகக்கேட்டார்பரமசிவானந்தம். அவர்களது நண்பர்களைப் போலவே நாட்டு மக்களும் சென்சாரைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சென்சார் என்பதுஒரு பாரபட்சம் வாய்ந்த ஸ்தாபனம் என்பது நாட்டு மக்களின் தீர்ப்பு, அதனால் பரமசிவானந்தம் எடுக்கும் புரட்சிப் படத்திற்கு ஏதாவது ஆபத்து வரும் என்று எதிர்பார்த்தனர்! சென்சாருக்கு முன்பே படத்தைப் பற்றிய விளம்பரங்கள் வெளிவந்தன.

இவை போன்றகொட்டை எழுத்து வாசகங்களோடு புரட்சித் படத்தின் விளம்பரம் ஏடுகளில் மின்னின.

மதவாதிக்கோர் மருந்து மறுமலர்ச்சித் தூதருக்கு விருந்து'

ஆண்டவன் பெயரால் அவனியை ஏமாற்றாதே' ஆண்டான் அடிமை அகிலத்தில் வேண்டாம்!

கடைசியாகப் படம் சென்சாருக்கும் சென்றது; படத்தில் எந்தக் காட்சியும்பாதிக்கப்படாதவகையில்இரண்டே இடங்களில்தான் சென்சார் வெட்டியிருக்கிறார்கள். என்ற சேதி நாடெங்கும் பரவிற்று; "அப்பாடா, படம் தப்பிப் பிழைத்தது' என்று நாட்டோர் பெருமூச்சு விட்டனர்.

குறிப்பிட்ட தேதியிலே படத்தை வெளியிடும்விளம்பரம் வந்தது.

அடடா! படத்தின் பெயரை இதுவரையில் சொல்லாமல் இருந்து விட்டேனே 'செவ்வானம் என்பதுதான் அந்தப் புரட்சிப் படத்தின் பெயராகும்.

நானூறு தியேட்டர்களில் ஒரே நாளில் படம் வெளியிடப்பட்டது; தியேட்டர்கள் இடிந்து நொறுங்கிவிடுமோ என்கிற அளவுக்குத் திரளான கூட்டம்; எந்தப் படத்திற்கும் இவ்வளவு பரபரப்பு இருந்ததில்லை!

தலை நகரத்திலே திரையிடப்படும் தியேட்டருக்குப் பரமசிவானந்தம் வருகை தந்திருந்தார், அவரைக் கண்ட மக்கள் ஆவலோடு வரவேற்றுக் குதூகலித்தனர்.

படம் ஆரம்பமானது

"செவ்வானம்'' என்ற தலைப்பைக் கண்டதும் ஒரே கைதட்டல் - வயிற்றெரிச்சல்காரர்கள் சிலரின் மனத்தைப் புண்படுத்தக் கூடிய அளவுக்கு மக்களின் ஆரவாரம். "கதை—வசனம்'! என்ற பெயர் காட்டப்பட்டது, அதனையொட்டி, நடிகர்கள், டைரக்டர் பெயர்கள் வந்தன இறுதியில், தயாரிப்பு பரமசிவானந்தம்'; என்ற எழுத்துக்கள் பெரும் கரகோஷத்தைப் பெற்றன — அடுத்த முதல் காட்சி என்ன என்று மக்கள் துடித்தனர்; திரை ஒரே வெளுப்பாயிருந்தது! சில வினாடிகள் அப்படியே இருந்தது பிறகு கீழ்க்காணும் எழுத்துக்கள் உருண்டு வந்தன. "படம் முற்றிற்று—வணக்கம்.''

மக்கள் திகைத்தனர், தியேட்டரில் மணி அடிக்கப் பட்டது. திரைகள் இழுக்கப் பட்டன. தியேட்டரில் ஒரே புரட்சி! மக்கள் பரமசிவானந்தத்தைச் சூழ்ந்துகொண்டனர்.

"என்ன அக்கிரமம்''' என்று கத்தினர்.

'எல்லாம் சென்சார் வேலை'' என்றார் அவர்,

"சென்சார் இரண்டு இடத்தில்தானே அய்யா வெட்டியதாகச் சொன்னார்கள்?' "ஆமாம் தோழர்களே! சென்சார் இரண்டே இடத்தில்தான் வெட்டினர்கள்!''

முதல் இடம்: டைட்டில் முடிந்ததும் வெட்டினர்கள்?

இரண்டாவது இடம்: 'வணக்கம்' என்பதற்கு முதல் பிரேமில் வெட்டி விட்டார்கள்! ஆக இரண்டே இடம்தான்!'' என்று பட முதலாளி பதில் சொன்னர்.

மக்கள் வெள்ளம் "சென்சார் ஆபீஸ்' திசையை நோக்கி, ஒரு ஆத்திரப் பார்வை வீசிற்று!

★



உரிமைக்குத் தமிழ் உறவுக்கு ஆங்கிலம்!

★ பேரறிஞர் அண்ணா ★

ஆங்கிலம் அந்நியனது மொழி! அயல் மொழி! ஆகவே ஆங்கிலம் கூடாது என்பது மற்றொரு பொருந்திடா வாதமாகும்,

ஆங்கிலம் அயலானது என்று கூறிடும் போதே நம்மில் - நமது நடையுடைபாவனையில் - நமது அறிவில் - அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளில் கலந்துள்ள அந்நியத் தனம்—அயலார் தன்மை அனைத்தையும் அப்படியேஉதறித்தள்ளிடப் போகிறோமா? முடியுமா அது? நடக்கத்தான் முடிகிறதா? இல்லையே!

அறிவு — ஆராய்ச்சி — ஆற்றல் எனும் துறைகளில் மட்டுமல்லாது, உணவும் பெருநிதியுமென நமக்குக் கிடைத்திடும் - நாமே கேட்டுக் கேட்டுப் பெற்றிடும் அந்நிய உதவிகள்தான் எவ்வளவு? கொஞ்சநஞ்சமா?



அதுமட்டுமல்ல: அந்நிய முறைகள் பலவற்றையும் ஏற்றுக்கொண்டு நமக்கென்றே உரித்தான சீரியபண்புகளையும் விட்டொழித்திருக்கின்றோம், நம்மில் பலர்.

கிராமப்புற வளர்ச்சி மட்டுமேபோதும் சுதேசியமே வாழ்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் என்று வாளாவிருக்கின்றோமா? டிராம்பே அணுசக்தி நிலயம், எண்ணூர் அனல் மின்சார உற்பத்திக்கூடம் என்பனவற்றைச் சுதேசியம் அல்லவென்று ஒதுக்குகின்றோமா? அந்நியமென்றாலும் அவசியமென்று அமைத்துத்தானே இருக்கின்றோம்! மென்மேலும் அமைத்திடவும் முனைந்திடுகின்றோம்!

வாழ்வின் பெரும்பகுதி. மிகப்பலவான துறைகள் அனைத்துமே அந்நியத்தோற்றம் —தன்மையில்தானே உள்ளன! அவைபற்றி கவலைப்படவில்லை. ஆனல் மொழிப் பிரச்சினையில் மட்டும் புத்தம் புதிய நவநாகரிகத் தேசியம் சுதேசியம் பேசிட முனைகின்றோம்! எவ்வளவு கருத்துக்குழப்பம் முரண்பாடு! நடைமுறைத் தடுமாற்றம்

அந்நிய நாட்டுக் கோதுமையை அந்நிய நாட்டுக் கப்பல்களில் நமது நாட்டுக்குக் கொண்டு வருகிறோம்! "அந்நியக்கோதுமையப்பா அது அதுவும் அந்நிய நாட்டுக் கப்பலில் வந்ததப்பா'' என்று அயல் நாட்டுக் கோதுமையை வெறுத்து ஒதுக்கிடும்போக்கு இல்லையே! அதனை உண்ணாமலா உள்ளோம்?

நமது உணவு. உறையுள் அமைப்பு, உடுப்புமுறை என்று எதைத் தொட்டாலும் பார்த்தாலும் அந்நியமணம் பெரிதும்கமழ்ந்திடத்தானே செய்கின்றது?

எத்தனையோ துறைகளில் அந்நியத் தன்மை மெத்தவும் ஊடுருவிப் பாய்ந்து பரவிப் பல்கிப் பெருகியும் வந்திருக்கின்றது. ஆழப்பதிந்தும் விட்டிருக்கின்றது! நாம் வாழ்ந்திடும்நிலைமையில்—நினைப்பில் - நடப்பில் 'அந்நியம்' அல்லாதது எது எனக் கண்டறிந்திடுவது கூட மெத்தவும் கடினம் என்பேன்! அதையும்விட அந்நியம் என்றிடத்தக்கன பலவும் நம்முடையனவே' என்ற நினைப்பும் நடப்பும் நம்மில் பலரிடமும்ஊறிவிட்டிருப்பதையும் கண்டிடலாம்!

ஆட்சி மொழித்துறையில் மட்டுமே அந்நிய மொழி கூடாது என்று தீவிர தேசியம் பேசப்புறப்பட்டு விடுகிறார்கள்! ஆனல் பிறதுறைகளைப்பற்றியநினைப்பே காணோமே

பிறவற்றில் இணைப்பும் பிணைப்பும் பயனும் தந்திடும் ஆங்கிலம் நாட்டின்இணைப்பு மொழியாகவும் தொடர்ந்துஇருந்திடுவதால் என்ன தவறு? தவறேதுமில்லை! சாலவும் பொருத்தந்தானே!

இந்திய நாட்டின் இணைப்பு மொழியாக ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்றுநாம்கூறிடுவதைச் சிலர் முறை தவறாகத்திரித்துக்கூறிப் பழித்துறைக்கின்றனர்! இழி மொழிகளை வீசிடுகின்றனர்! தவறான புள்ளிவிவரங்களையும் பொருந்தாத வாதங்களையும் எடுத்துக் கூறுகின்றனர். 'ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து' என்றுகூட பூச்சாண்டி காட்டுகின்றனர். "இராணுவத்தை உம்மீது ஏவி விடுவோம்'' எனவுஞ்சிலர் அச்சுறுத்தி ஆர்ப்பரித்திடவும் முனைகின்றனரே.

அச்சுறுத்தலும், ஆர்ப்பரித்தலும் ஆதிக்க வெறி முறையும் பிரச்சினைகளை நல்லபடி தீர்த்திடக் கிஞ்சிற்றும் உதவிடாது என்ற பேருண்மைதனை மறந்திடல் நல்லதன்றே:

நம்மரும் வாழ்வதனின் வளம்—உயிர் — ஊட்டம் - இனிமை யென ஊறிக் கலந்து கிடக்கும் உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் மீது வேற்று மொழி—இந்தி மொழி ஆதிக்கம் செலுத்துவதை, அச்சுறுத்தலுக்குப் பயந்து அனுமதித்திடவே மாட்டோம்!

எம்மையும் எம்மரும் வழித் தோன்றல்களின் வாழ்வினையும் தாழ்த்திக் கொள்ளக் கிஞ்சிற்றும் ஒருமைப்படோம்! என்றென்றும் ஒருமைப் பட்டிடவே மாட்டோம்; என்பது உறுதி; மெத்தவும் உறுதி!

தேசிய ஒருமைப்பாடு என்பது நல்ல குறிக்கோள்; மதித்திடத் தக்கதுதான். ஆனல் அதே ஒருமைப்பாட்டின் பெயரால் நாட்டின் மொழித் துறையிலோ அல்லது பொருளாதார மேம்பாட்டுத் துறையிலோ அநீதியும் ஆதிக்கமும் தலைதூக்கித் தாண்டவமாடிட அனுமதித்திடலாமா? சகித்துக் கொண்டிருக்கத்தான் வேண்டுமோ? அது ஆகாத காரியம் மட்டுமல்ல, நடந்திடவே முடியாத நினைப்புமாகும்!

தேசிய ஒருமைப் பாட்டின் பெயரால் இந்தி மொழி செலுத்திட முனைந்திடும் ஆதிக்க வெறியினை ஒப்பிடோம்! ஒருபோதும் ஏற்றிடோம்!

இணைப்பு மொழியாக ஆங்கிலத்தை ஏற்பதால், ஆங்கிலத்திற்குத் தனித்ததோர் உயரிடம்—சிறப்பிடம் கொடுப்பதாகிவிடும் என்றும் தவறாகக் குறை கூறப்படுகின்றது.

மாநிலத்தில், தாய்மொழியில்—பிரதேச மொழியில் ஆட்சி! மத்திய அரசில், ஆங்கிலம் இணைப்பு மொழி என்பதால் கெடுதல் ஏதும் இல்லை! உரிமைக்குத் தமிழ், உறவுக்கு ஆங்கிலம் என்பதுதானே இதன் பொருள்?

இதோடு, கல்லூரிகளில் தமிழைப் போதனா மொழியாக்கிடும் திட்டமும் படிப்படியாக—ஆனல் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றது. இதனல் தமிழும், அதேபோல் பிற மாநிலங்களில் அந்தந்தப் பிரதேச மொழிகளும் வளமும் வல்லமையும் பெற்றுத் தங்குதடையின்றி வளரும் வாய்ப்பு உள்ளது. என்பதையும் சுட்டிக் காட்டிட விரும்புகின்றேன்.

எனவே இன்றுள்ள நிலையில் உரிமைக் குத் தமிழ்! உறவுக்கு ஆங்கிலம் என்ற நிலையிலிருந்து மாறிடோம்!

ஒட்டி உறவாடி வாழ்ந்திடுவோம்! அதே போதில், தம் தம் உரிமைக்குப் பங்கமும் பழுதும் கிஞ்சிற்றும் வந்திடாமல் பாதுகாத்திடவும் வல்லோம். தப்பிடோம் அதனில்! என்பதனை எந்நாளும் காப்போமாக!

(அண்ணாவின் அண்ணாமலைப் பேருரையில் சிந்திய சில முத்துக்கள்)

அனுப்பியவர்:
நெய்வேலி ஜி. சுப்பிரமணியம்

ஏ, தாழ்ந்த தமிழகமே!

சர்க்காரியா அறிக்கையின் அடிப்படையில் வழக்கு வந்தே தீரும்! குற்றவாளிகளைத் தண்டித்தே தீருவேன் — தப்பவிட மாட்டேன் இது உறுதி!!

இதுதமிழ்நாட்டுமக்களுக்குக்கேட்டுக்கேட்டு சலித்துப்போன செய்தி; தெருவோர வித்தைக் காரனின் ''கீரி—பாம்பு'' சண்டை அறிவிப்பைப் புறம் கண்ட புளித்துப்போன சங்கதி,

அறிக்கைக் குற்றவாளி என ஆள்காட்டி விரல் நீட்டுகின்ற பலர் 'அந்த முகாமிலே அடைக்கலம் புகுந்துவிட்டதைப்பற்றி அவர்களிடம் வினுத்தொடுப்பதல்ல நமது வாதம்.

வழக்கு—மன்றத்திற்கு வந்து — எதிர் வாதம் நடந்து—சாட்சி சம்பிரதாயச் சடங்குகள் முடிந்து. பிறகு வருவது தீர்ப்பு ... என்ற வாதத்தையும் வலியுறுத்தாமல் நிறுத்தி வைப்போம்.

இத்தனை பேசுகின்ற நீதியின் காவல் தேவதைகளான நீங்கள் !இஸ்மாயில்அறிக்கை மீது எடுத்த நடவடிக்கையின் தன்மை என்ன? என்று கூடக் கேட்காமல் விட்டுவிடுவோம்.

மக்கள் மன்றம்—சட்டமன்றம் — நீதிமன்றம் மூன்றும் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான முறையான இடங்களாக இருக்க நமது முதல்வர் நாடுவிட்டு நாடு போய் நடவடிக்கை பற்றிப் பேசி உள்ள முறை பற்றியே முதலில் கவனிக்கத் தோன்றுகிறது.

தனி மனித வெறுப்பைத் தீர்த்துக்கொள்வதற்காக ஒரு குடும்பத் தலைவன் வீட்டு எல்லையை விட்டு நடைபாதைக்கு வந்துவிட்டால் ஊர் சிரிக்கும் —உலகம் தூற்றும் அந்தக் கேவலம் அவனுக்கும் சேர்த்துத்தான்.

நாலரைக் கோடி மக்களின் தலைமைப் பொறுப்பை ஏற்ற முதல்வரின் பொறுப்பற்ற பேச்சை எந்த வகை நியாயத்துடன் சேர்ப்பது என்பதுதான் புரியவில்லை.

போற்றிப் பாதுகாக்கவேண்டிய மரபுகளைப் புதைகுழிக்கு அனுப்புவதில் அவர் அவசரம் காட்டி விட்டார்...

மரியாதையை விலைபேசி விற்பதில் பதவித் தகுதியையும் மறந்து செயல்பட்டு விட்டார்......

மானமா? அப்படி ஒன்று இருக்கின்றதா? என்று தயக்கம் சிறிதுமற்ற தன் நடவடிக்கைகள் மூலம் கேட்காமல் கேட்டு வைத்திருக்கிருர்.

நாடாளுமன்ற நெறிமுறைகளை நடு வீதியிலே நிறுத்தி வேடிக்கைப் பொருளாக்கியவரைப் பற்றி வேறென்ன சொல்வது?

இந்தத் தமிழ் மண்ணின் பெருமையை வேண்டிய மட்டும் சிதைப்பேன் — சிதறடிப்பேன் என்று சத்தியம் செய்துவிட்டுப் புறப்பட்டவரைப் போல் நடந்து கொண்டவரை நாமென்ன சொல்லி அழைப்பது ?

உலகை வலம் வருவதற்குள் உள்ளூர் அரசியலைச் சல்லடை போட்டுச் சலித்துள்ளாரே-பதம்பிரித்துக் காட்டியுள்ளாரே— ஐரோப்பாவிலே துவக்கிய புராணம் 'ஆதவன் உதிக்கும் நாடு' வரை தொடர்ந்துள்ளதே—கண்ணியம் கடைச்சரக்காவது ஏற்றுக்கொள்ளத் தக்கதா?

அவருக்குப் பிடித்தவர்களுக்கு மிகவும் பிடித்தமான பாரதி சொன்னனே!—

'ஆயிரம் உண்டிங்கு சாதி — இதில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி'

என்று. நம்மீதுதான் கோபம் பாவலர் பாரதி மீதுமா! அவரென்ன 'பந்த்' நடத்தித் தலைமை தாங்கினரா? பாரதி எவனையோதடுத்தான் இங்கிருந்து போய் அங்கே கடை விரிப்பவர்களை அல்ல என்கிறரா முதல்வர்?

அந்நியன் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாது. நாம் அந்நிய மண்ணில் உள் விவகாரத்தை அலசி ஆராயலாம் என்பது, முதல்வர் கண்ட பாரதியிசம் என்பதா?

அவசர நிலைக் காலத்தில் உள் நாட்டிலேயே இந்தியப் பேரரசு பற்றிப் பேசியவர்களை நான்கு சுவர்களுக்குள் நடமாட விட்ட அம்மையாருக்குத் துணை போனவர் — எந்த நியாயத்தின் அடிப்படையில் அந்நிய மண்ணில் கருத்துத் தெரிவிக்கலாம்... சொல்வாரா? எடுபிடி ஏடுகளாவது சொல்லுமா?

அண்மையில் அவசர நிலைக்குப்பின் விடுதலைபெற்ற நாடாயிற்றே—இவரும் ஒருமாநில முதல்வராயிற்றே — எனப் பட்டும் படாமலும் அவர்கள் கேட்டு வைத்தால்...

மனிதனுக்குத் தலைகால் புரியவில்லை!

ஆகா, நமது 'பரிபாலன' மாட்சி கடல் கடந்தும் பரவி மணம் பரப்புகின்றதே எனப் பூரித்து விட்டார்

அந்தக் கணத்தில் உள்மன உறுத்தல்களை எல்லாம் ஒரு முறை வருடி — கசப்புணர்வின் வெளிப்பாடுகளை வார்த்தையாக்கி விட்டார். உணர்ச்சி வயப்பட்டு உளறிவிட்டார்.

அவர்களும், புரியாத நிலையில்தான் பிதற்றலை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிருர்கள். நிலைமை வேருக இருந்து, கழகம் போன்ற எதிர்க்கட்சிகள் தொடுக்கும் பாணியில் அவர்

அருண சண்முகம் பி. எஸ். சி.

கள் கேள்விகளைத் தொடுத்திருந்தால்... எப்படித் தப்பிப்பார்... எத்தனை நாட்டுக்காரனைச் சொல்லமுடியும் 'கருணநிதியின் கையாள் என்று

இத்தகு இக்கட்டான நிலைகளில் பயன்படுத்த வேண்டிய கேடயம் அது 'எங்கள் உள் நாட்டு விவகாரம்' என்பதே, இதில் ஒன்றும் மரியாதை பாழ்பட்டு விடாது.

இதற்காக அவர்கள் ஒன்றும் அழைப்பைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அனுப்பி வைத்துவிட மாட்டார்கள். அல்லது பட ஒப்பந்தங்கள் செய்ய விடாமல் தடுத்துவிட மாட்டார்கள்.

(ஏற்கனவே அண்ணயிச விளக்கவுரை' கேட்டுவிட்டு அனைத்துப் பல்கலைக்கழகங்களும்ஆராய்ச்சிநடத்திக்கொண்டிருக்கின்றனவாம். அதற்குள் இன்னும் கிளறித் 'தத்துவம்' கேட்டு செரிக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை)

பிறகேன் பிரச்சினையை உருவாக்கியிருக்கிருர் பெரிய பதவி வகிக்கும் சினிமா 'சின்னவர்'

அவரோ—அவரைச் சார்ந்தவர்களோ, இதை மிக மிகச் சாதாரணமாகக் கருதலாம், நம்மைப் பொறுத்தவரை இது நாலரைக் கோடி மக்களின் மானப் பிரச்சினை.

இது—ஒரு கெட்ட முன்மாதிரி—
முறைகெட்ட அரசியலின் முழு வடிவம்!

அரை வேக்காட்டுத்தனத்திற்கான அச்சாரம்!

வழக்கம்போலவே, இதையும் சில 'பிழைக்கும்—உழைக்கும்' ஏடுகள் கண்டிப்பதை விட்டுக் கனிவோடு அரவணைத்துக் கலைஞர்மீதுள்ள

(9 பக்கம் பார்க்க)

கம்ப்யூட்டர் வழி தமிழ் மொழிபெயர்ப்பு ஓர் அவசரப்பணி!

கு. நல்லதம்பி பி. இ. எம்டெக்

தாய்மொழியில் கற்பது தான் இயல்பானது — விரைவானது—திறமையைப் பெரிதும் வளர்க்கக் கூடியது என்பனவெல்லாம் இன்று அறிஞர் அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மை. அண்ணல் காந்தி அடிகள் பல ஆண்டுகட்கு முன்பே வலியுறுத்திச் சென்ற உண்மையுங்கூட. பிறமொழியில் கற்பதென்பது நம்மைப் போன்று அடிமைப்பட்டிருந்த — பின்தங்கிய நாடுகளில் தவிர, வேறெந்த முன்னேறிய நாடுகளிலும் காண முடியாத ஒரு விசித்திர நிலைமை. ஆனல்நடந்துவிட்ட ஒன்றை இன்று நாம் நினைத்துப் பயன் இல்லை எனவே தாய்மொழிக் கல்விக்கு மாறு முன், ஆவன அனைத்தும் செய்து விட்டோமா என ஆழ்ந்து எண்ணிப்பார்த்தல் வேண்டும். காரணம் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறும் போது ஒரு வெற்றிடம் உண்டாகுமானல் அது தற்கொலைக்கு ஒப்பாகும். இத்தகைய அரைகுறையான அவசரச்செயல்,ஒருதலைமுறையை அல்ல, பல தலைமுறைகளைப் பாதித்து விடும்.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்க எவ்வளவோ நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல துறைகளிலும் உள்ள ஆங்கிலச் சொற்களுக்கு நிகரானதமிழ்ச் சொற்கள் கண்டெடுக்கப்பட்டுதொகுக்கப்பட்டுள்ளன. சில துறைகளில் அறிவியல், பொறியியல் துறைகளில் பட்டப்படிப்பிற்கான பல பாடநூல்கள் கூட வெளியிடப்பட்டுள்ளன. இத்துறையில்மேலும் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் கலைக்கதிரில் (ஜனவரி 78 — தமிழ் எழுத்துச் சீரமைப்பு, மார்ச்சு 78—அறிவியல் தமிழ் ஆக்க வழிமுறைகள்) மிகவும் விரிவாக . எழுதியுள்ளார் அவற்றையெல்லாம் செய்வதுடன் மற்றோர் அவசரமான-இன்றியமையாத பணியும் உள்ளது.

பல்கலைக் கழகங்களில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் நோக்குடன், பாட நூல்களைத் தமிழில் எழுதும் பணிகள் தொடங்கப்பெற்றன. பல பாடநூல்களும் வெளியிடப்பட்டன. ஆனல் இடையில் சுமார் இரண்டாண்டுக் காலமாக இப்பணியில் சுணக்கம் ஏற்பட்டு எழுதிமுடிக்கப்பட்டு அச்சேறிய நூல்கள் கூடத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்படாமல் உள்ளன. இப்பணியை மீண்டும் புத்தார்வத்தோடும், புது வேகத்தோடும் துவக்கி, தொடர்ந்திடல் வேண்டும். ஆனல் இது மட்டும் போதியதன்று.

இன்றைய நிலையில் நாம் அறிவுலகில் பின்தங்கிய நிலையில்தான் உள்ளோம் சிலபாட நூல்களைத் தமிழில் எழுதியதுமே, பல்கலைக் கழகங்களில் தமிழைப் பயிற்று மொழியாக்கி விட்டதாகக் கருதிவிட முடியாது. இன்று நாம் அறிவுலகத்தோடு — வெளியுலகத்தோடு தொடர்பு கொள்ளும் மொழியாக இருப்பது ஆங்கிலம். ஆங்கிலத்தில் வரும் கருத்துக்கள்காலதாமதமின்றி உடனுக்குடன் நமக்குத் தமிழில் கிடைத்தால்தான் உலகின் பிற பாகங்களின் வளர்ச்சியைநாம் அடியொற்றிச் செல்ல இயலும். இல்லையெனில் நாம் ஒதுக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டுவிடுவோம். உலகில் அறிவியலின் வளர்ச்சியோ வாயுவேகம. மனோவேகத்தில் உள்ளது. ஒவ்வொரு பத்தாண்டிலும அறிவு வளர்ச்சி ஏறத்தாழ இரட்டிப்பாகிக்கொண்டு வருகிறது. ஒரு சில அறிஞர்கள் அமர்ந்து அறிவியலையும் பிறவற்றையும் தமிழாக்கினல மட்டும் போதாது; அவற்றின வளர்ச்சியின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாது. அறிஞர்கள் பல்வேறு துறைகளிலும துறைச் சொற்களை உருவாக்கித் தொகுக்கட்டும். ஆனல் மொழி பெயர்ப்புப் பணிககு மிகவும் வேக தேவை. எனவே, இப்பணிக்குக் கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை. அமெரிக்கரும் சோவியத்தாரும் வானவெளிப் பயணத்தில் கூட்டாக முயன்ற போது, அவர்களுக்குள்மொழி பெயர்ப்பாளராகச் செயல்பட்டது கம்ப்யூட்டர்தான்! கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி ஒரு நிமிடத்திற்கு 40 பக்கம் வீதம் ஆங்கிலத்தில் உருசிய மொழியில் மொழி பெயர்த்தார்களாம்' இம்முன்னுதாரணத்தைப் பயனபடுத்தி அன்னைத்தமிழை உலகின் வளர்ந்த மொழிகளான ஆங்கிலம் இரஷ்யன், ஜெர்மன், ஜப்பானிய மொழி, பிரஞ்சு மொழி போன்றவற்றுடன் கம்ப்யூட்டர் வழியே இணைக்கும் வழிவகைகளைக் காணல் வேண்டும். குறைந்த அளவு ஆங்கிலத்துடன் இணைக்கும் வழியையாவது மிக விரைந்து செய்து முடித்தல் இன்றைய அவசரத்தேவை தமிழகத்தில் முதன் முதலாகத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் தோன்றியுள்ள நேரம் இது. புதிய பல்கலைக் கழகத்தின் முன் இப்புனிதப் பணி—கம்ப்யூட்டர் வழியே அன்னைத் தமிழை அறிவுலகத்தோடு இணைக்கும் பணி தலையாய பணியாகக் காத்திருக்கிறது. இதில் நாம் வென்ருல் தமிழும் வாழும்; தமிழினமும் வாழும்

★

நன்றி: 'கலைக்கதிர்'
டிசம்பர். 1978

சிறந்த அரசியல் மரபுகள் உருவாக....!

இரா. இராசு
பி. ஏ. பி. எல்.

இந்தியாவை ஒரு நாடு என்பதைவிட ஒரு துணைக் கண்டம் என்று அழைக்கலாம். இங்கே பலதரப்பட்ட மொழி இனம், சமயம், சாதி பண்பாடு, நிறம் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள். பாரதத்திருநாடு பூகோள ரீதியாக வடக்கு, தெற்கு, மேற்கு கிழக்கு, வடகிழக்கு என்று அமைந்துள்ளது, இவ்வளவு அகன்ற, விரிந்த நாட்டை ஒரே குடையின் கீழ் கொணர்ந்து, கோலோச்சுவதிலே பல சிரமங்களும், பிரச்சினைகளும் உள்ளன இந்தத் துணைக்கண்டத்தை ஒற்றுமைப்படுத்த சிறந்த நல்ல மரபுகளையும், வழக்கங்களையும் உருவாக்கி கடைப்பிடித்து வர வேண்டியது இன்றியமையாதது ஆகும். கீழே பரிந்குரைக்கும் கருத்துக்களைச் செயல்படுத்தினால் இந்நாட்டில் ஒற்றுமை ஓங்கும். உணர்வு உறுதிப்படும்.

மைய அரசின் அமைச்சரவை

நம் நாட்டின் உச்ச நிர்வாக அமைப்பு நடுவண்ணரசின் அமைச்சரவை ஆகும். இவ்வுயர்மட்ட அமைப்பு நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் பாதுகாக்கும் பேணும் அமைப்பாக அமைந்திருக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும் நடுவண்ணரசின் அமைச்சர் அவையில் காபினெட் அமைச்சர்கள் உயர்ந்த இடத்தைப் பெற்றவர்கள். இந்த அவையிலே எல்லா மாநிலங்களுக்கும் எல்லாமொழியினருக்கும், எல்லா சமயத்தினருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரிய பங்கினை வழங்கிட வேண்டியது. இன்றியமையாதது ஆகும். இதில் அனைத்துக்கருத்தினருக்கும் பிரதிநிதித்தவம் வழங்கிட நல்ல மரபுகள் பின்பற்றப்படவேண்டும். ஆனால் அவ்வாறு பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதில்லை, என்பது வரலாற்று உண்மையாகும். இந்த அவையில் சில மாநிலங்கள் எப்பொழுதும் பிரதிநிதித்துவம் பெறுகையில், சில மாநிலங்களுக்கு நீண்டகாலங்களாக, பிரதிந்தித்துவம்மறுக்கப்படுகிறது.

சான்றாக 1950 ஜனவரி 26-ம் தேதியிலிருந்து ஏறத்தாழ 12 அமைச்சரவைகள் பதவி வகித்துள்ளன. மாநிலங்கள் வாரியாக பிரதிநிதித்துவம் பெற்றகாபினெட் அமைச்சர்களைப் பொறுத்த வரையில் உ. பி, பீகார், பஞ்சாப், குஜராத், மராட்டியம், ஆகிய மாநிலங்கள் எப்பொழுதும் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. 1952 மே 13-ம் தேதியிலிருந்து, 1957 ஏப்ரல் 17-ம் தேதி வரையில் உள்ள காலப் பகுதியில் 20 மைய ஒதுக்கமானதனி காபினட் அமைச்சர்களில் 6 பேர்கள் உ. பி. யைச் சேர்ந்தவர்கள். 1962 ஏப்ரல் 10-ம் தேதியிலிருந்து, 1964 மே 27-ம் தேதி வரையிலான காலப் பகுதியில் 24 காபினெட் அமைச்சர்களில் 6 பேர் உ. பி.யைச் சேர்ந்தவர்கள். 1950 மே முதல் 1952 மே வரை தமிழ் நாட்டுக்கு மத்திய அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் இல்லை. மத்திய அமைச்சர் அவையில் கேந்திர அமைச்சர் பொறுப்புகள் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும், அதிகாரம் இல்லாதபொறுப்புகள் தென்மாநிலங்கள், வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப் பட்டன மேலும், தென்னாட்டைச் சேர்ந்த சுதந்திர சிந்தனை இல்லாத பலகீனமானவர்களுக்கும், ''ஆமாம்சாமி'' போடுபவர்களுக்குமே அமைச்சர் அவையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. நம் அரசமைப்பு முறையைக் கொண்ட பிறநாடுகளில் நிலவும் நடைமுறையை கருத்தில்கொண்டு, நம் நாட்டிலும் செயல்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும். இதனைத் தீர்க்க எந்த ஒரு மாநிலத்தைச் சேர்ந்த காபினெட் தகுதி வாய்ந்த மைய அமைச்சர்களின் எண்ணிக்கையும். மொத்த காபினெட் அமைச்சர்களின் எண்ணிக்கையில் 1-5 பங்குக்கு மேல் இருக்கக் கூடாது என்ற மரபினை உருவாக்குவதுஇன்றியமையாதது ஆகும்.

அமெரிக்க எடுத்துக்காட்டு

இவ்வாறு எல்லாப் பகுதியினருக்கும், பிரதிநிதித்துவம் வழங்கி எல்லாருடைய மனத்தாங்கலையும் போக்க, பலநாடுகள் முயற்சி செய்கின்றன. அந்த நாடுகளை ஆராய்வோம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் எல்லாருக்கும்பிரதிநிதித்துவம்வழங்கவில்லைஎன்ற குறைபாடே 1861-ம் வருடம் முதல் 1865-ம் வருடம் வரை நடந்த உள்நாட்டுப் போருக்குக் காரணம் ஆகும்.

இவ்வாறு உள்நாட்டு யுத்தம் மீண்டும் வரக்கூடாது என்ற கருத்தினை மேற்கொண்டு அமெரிக்க அமைச்சரவையில் இயன்றவரை விரிவான நிலவரை அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது.

நம்முடைய நாட்டின் பல மொழிகள். பல இனத்தைச் சேர்ந்தவர்கள் பல சமயத்தைத் தழுவுபவர்கள் வாழ்கிறார்கள். அனைவரையும் ஒற்றுமைப்படுத்தவேண்டியது இன்றியமையாதது ஆகும். இவ்வாறு ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் குபெக் புரட்சிக்குப் பிறகு கனடா நாடு ஓரளவு வெற்றி பெற்றுள்ளது: கனடா நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள முதல் மரபு மத்திய அமைச்சர் அவையில் குறைந்த பட்சம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு பிரதிநிதியாவது இருக்க வேண்டும் என்பதாகும். நம்முடைய நாட்டின் 22 மாநிலங்களும். பல ஒன்றிய நியமனங்களும், உள்ளன, கூடுமான வரை ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு காபினெட் அமைச்சராவது இருக்க முயற்சி எடுக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும். தற்பொழுது உள்ள நடுவண்ண அரசு அமைச்சர் அவையில் பல மாநிலங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகிறோம், அந்நியச்செலாவணியை அதிகமாக ஈட்டித்தரும் கேரளாவுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். கனடா அமைச்சர் அவையில் குறைந்தது 3 பிரஞ்சு பேசும் பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்ற மரபு உள்ளது. இந்த மரபினை நம் நாட்டில் பின்பற்ற வேண்டியது இன்றியமையாதது ஆகும். 18 காபினெட் அமைச்சர்களில் குறைந்த பட்சம் 10 பேர் இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களாக இருந்தால் இந்தி பேசாத மக்களுக்கு இருக்கும் அச்சம் குறைய வாய்ப்பு ஏற்படும். இது இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத மக்களுடைய மக்கள் தொகை விகிதாசாரத்தில் அமைந்துள்ளது. மேலும் தமிழ்நாடு கேரளம், வங்காளம். போன்ற மாநிலங்களுக்குக்கண்டிப்பாக பிரதிநிதித்துவம், மொழி அடிப்படையில் இருக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும்,

(தொடரும்)

போர் முழக்கம் செய்வோம்!

(ரிசியூர் வல்லாளன்)

முரசே முழங்கு — தமிழர்
முரசே முழங்கு!
தீந்தமிழ்ப் பண்ணிலே திசையெட்டும் அதிரவே
தீரமுடன் மானமுடன் தீம்தீம் தீமென
(முரசே...)

மூவேந்தர் ஆண்டயெங்கள் தாய்த்திரு நாடு!
முச்சங்கம் கண்டதோர் செந்தமிழ் வீடு!
செந்தமிழே எங்களுயிர் அதுவே பண்பாடு!
செந்தீயும் மூழ்கிடுவோம் 'வாழ்கதமிழ்' என்றே!
(முரசே...)

எல்லாரும் உறவே! எல்லார்க்கும் ஊரே!
என்றவன் தமிழன்! எந்நாளும் மறவோம்!
வந்தவர்கள் சூதாட எண்ணுகின்ற போது
வாளோடு எழுந்திடுவோம்! தூங்கிவிட மாட்டோம்!
(முரசே...)

பிச்சைக்கு வந்தோர்முன் கையேந்தல் அழகோ?
எச்சிற்குப் பாய்ந்தோடும் நாயாமோ தமிழன்?
வள்ளுவரும் காப்பியரும் வாழ்ந்ததிரு நாட்டை
வந்தோரும் ஆளுவதோ? மானமிது தானோ?
(முரசே...)

கயமைக்கு காலமெனில் கயவரையே மாய்ப்போம்!
தீமைக்கு வாழ்வுதரும் பாவிகளைச் சாய்ப்போம்!
நற்றமிழே! எந்தாயே! எங்களுயிர்க் கலைஞர்
நாடாளச் செய்திடவே போர்முழக்கம் செய்வோம்!
(முரசே...)

ஏ, தாழ்ந்த தமிழகமே...

[8-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தின் மீதுள்ள கோபத்தைத் தீர்த்துக் கொள்கின்றன,

அதற்காக—

அண்ணாவும்— ஆச்சாரியாரும். காமராசரும், கலைஞரும், சீரியஇராச தந்திரத்தின்மூலம் சிறந்த நிர்வாகத் திறன் மூலம பதவிக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்த இடத்தில் அரசியல் விபத்தின் காரணமாகப் பொறுப்பில் உட்கார்ந்து விட்டதற்காகவே பொறுத்துக் கொள்வதும்-சகித்துக்கொள்வதும் இயலாத காரியம்.

கலைஞரோடு கதை முடியவில்லை...

அவர் மைய அரசையும் விட்டு வைக்கவில்லை. நேற்றுவரை நாடாளுமன்றத்தில் தோளில் கைபோட்டு நடந்துவிட்டு, சிக்மகளூர் 'கர்நாடகத்தின் அருப்புக்கோட்டை ஆனதும் ராகம் மாறியிருக்கிறது,

அவரை விட்டால் ஆளில்லை என அம்மையாருக்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார்.

மூன்றாவது சுதந்திரப் போரின் இரண்டாவது ஜே, பி. என்று சுவரொட்டி தயாரானலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதுசரி இங்கே இமயத்திற்கும் குமரிக்கும் இடைபட்ட பகுதியில் இதை பேச இடமில்லையா நாட்டில்,என்ன அவசர நிலையா? பேசினால் தேச துரோக வழக்கா போட்டுவிடுவார்கள். மைய அரசைக் காய மற்றொரு நாட்டு மேடையா?

புதுவையில் ஆட்சி நடத்திய அழகுக்கு— அந்தச் சின்னஞ்சிறு மாநிலத்தில் நடத்திய கண்ணாமூச்சு விளையாட்டுக்கு.அடுத்தவர்களைக் குறை கூறும் முன் கொஞ்சம் சிந்திக்கலாகாதா?

காதல்—வீரம்— கடத்தல்— கற்பழிப்பு எல்லாம் இணைந்த இணையற்ற புதுவை ஆட்சியின் சாதனையைப் (!) படமாக்கி (A) சான்றுடன் எடுத்துச் சென்றிருந்தால், அவர்களெல்லாம் பார்த்துக் களித்திருப்பார்களே...! ஏன் செய்யவில்லை?

ஓ! இது அவரது ரத்தத்தின் ரத்தங்கள் அரங்கேற்றிய திருவிளையாடல்கள் என்பதால் தானே தயக்கம்? அப்படியாயின்

ஒரு குலத்துக்கு ஒரு நீதி மனுநீதி
எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி எம். ஜி. ஆர். நீதியா?

ஏ! தாழ்ந்த தமிழகமே!

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00
ஆறுமாத சந்தா ரூ. 13.00

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறுமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம சாலை மதுரை 11
தனிச்சிறப்பு: ஜிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 26. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72. C டவுன்ஹால்ரோடு, மதுரை.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்:

பெரியார்!

—இந்தச் சொல்லைக்கேட்டாலே-

—சிலருக்குத் தீப்பிழம்பு தாக்கி விட்டது போன்ற எரிச்சல்!

—சிலருக்கு வேப்பெண்ணெய்யை விழுங்கிவிட்டது போன்ற குமட்டல்!

அந்த எரிச்சலாலும் குமட்டலாலும் பெரியாரின் கருத்து எதுவாக இருந்தாலும் அவர்கள் மறுப்பார்கள்; வெறுப்பார்கள்.

அதனால்தான் —
பகுத்தறிவு
மொழிப்பற்று
இனஎழுச்சி
பொதுவுடைமை

—இப்படி எந்தப் பொது இலட்சியமானாலும் அந்தப் 'பத்தாம் பசலிகள்' பழமை விரும்பிகள் — ஏற்றுக் கொள்வதே இல்லை.

அந்தக் 'கிணற்றுத் தவளைகள்'தாம்—இன்று பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தையும் தாக்குகிறார்கள்.

புதுமைக்குப் போர்ப்பரணி!

தந்தை பெரியார் ஒரு சொந்தச் சிந்தனையாளர், ஆகும் ஈயம் போன்ற கனிப்பொருள் மிச்சம் ஆகும்.

அச்சுக் கோப்பதற்குரிய காலம் மிச்சமாகும்; கூலி மிச்சமாகும். ணை, லை, ணு, ரு— முதலான தனி அச்சு வடிவங்கள் அடைத்துக் கொள்ளக் கூடிய இடம் — அச்சாகும் தாளிலும் மிச்சமாகும்; அவை பாதுகாப்பாக வைக்கப் பெறும் சட்டப் பெட்டிகளிலும் மிச்சமாகும்.

அடுத்து 'ஐ' கார ஓசை வடிவம் 'ஆ' கார ஓசை வடிவும் எல்லா மெய்யெழுத்துக்களுக்கும் ஒரே சீராக அமைவதற்கும் இதனால் ஒரே ஓசை வடிவத்தில் மாறுபட்ட எழுத்துக்களின் குழப்பம் இல்லாமல் குழந்தைகள் எளிதில் கற்பதற்கும் இச்சீர்திருத்தம் வகை செய்கிறது.

தட்டெழுத்து அச்சுப் பொறியிலும் இவ்வாறே இடத்தின் மிச்சமும். நேரமிச்சமும் ஏற்படுகின்றன.

எதையுமே வீணடிக்கக் கூடாது—விரைந்தும் செயலாற்ற வேண்டும் என்று எண்ணி இயங்கியவர் பெரியார்.

பகுத்தறிவு என்றாலே முகத்தைச் சுளிப்பவர்கள்— பாகற்காய்க் கசப்பாகக்கருதி

"அறிமுக"

அதனை வெறுப்பவர்கள் — பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்பற்றியும் எரிச்சலைக் கொட்டுவது — அவர்களின் அறிவுக்கு ஏற்பட்டுள்ள வறுமையையே காட்டுகிறது.

பகுத்தறிவும் மூடநம்பிக்கை ஆக முடியும் —என்று தலையங்கமே தீட்டியுள்ளது ஒரு கிழமை ஏடு.

அதில் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தையும் சாடியுள்ளார் அதன் ஆசிரியர்.

தமிழ் வளர்ச்சி பற்றிக் கருத்துக் கூறவே தகுதி உண்டா அந்த ஏட்டுக்கு? என்பதே ஆராயப்பட வேண்டிய கேள்வியாகும்.

ஏனெனில் தமிழ்ப் பகைவர்களுக்குக் கொத்தடிமை ஆகி குற்றேவல்புரிவதே அந்த ஏடுதான்!

தமிழ்க் கொலை புரிகின்றவர்களை யெல்லாம் பெரிய எழுத்தாளர்களாகத் தட்டிக் கொடுத்து வளர்த்து வரும் ஏடுகளுக்கெல்லாம் முன்னோடித் தளபதியாக விளங்குவதும் அந்த ஏடுதான்'

நல்ல தமிழ்ச் சொற்களையெல்லாம் இல்லாது ஒழித்துக் கட்ட வழி வகுத்து அயல் மொழிச் சொற்கலப்பு நஞ்சைப் புகுத்துவதோடு நில்லாமல் ஆங்கில எழுத்துக் கலப்பையும் நுழைத்து தமிழின் வரிவடிவ வேருக்கே தணலை அள்ளிப் போடுவதற்கு வாயிற் கதவைத் திறந்து விட்டதும் அந்த ஏடுதான்,

ஏன், இன்றைக்கும் கூட தமிழை வைத்து அது வணிகம் புரியவில்லையா?

தமிழ்க் கொலைக்குச் சான்று!

எத்தனையோ பேரறிஞர்கள், அறிவியல் அறிஞர்கள். தொழில் நுட்ப வல்லுநர்கள் கலைச் சிற்பிகள்—இவர்களையெல்லாம் விட்டு விட்டு ஒரு நடிகையின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுகிறதே எதற்காக மனித மனத்தில் ஒளிந்துள்ள சில்லுண்டி ஆசைகளைக் கிளறி விட்டுப் படிப்பவர்களின் சில்லறையைக் கறக்கத்தானே

'மனந் திறந்து சொல்லுகின்ற' அந்த நடிகைதான் ஆகட்டும், எவ்வளவு அழகான தமிழில் எழுதுகிறார் தெரியுமா?

இதோ சில வரிகள்;

"......பிராக்டிகல் காரியங்களை மாதவன்தான் ஹாண்டில் பண்ணுகிறார்"

"...சினிமாவிலே எனக்குக் கொஞ்சம் கூட இன்டரெஸ்ட் வரக் கூடாதுங்கிறதுலே ஷிவாஸ் பர்டிகுலர்லி கேர்ஃபுல்."

'ட்ரெயின் கிளம்பறவரையிலும் கம்பார்ட்மெண்டிலே உட்கார்ந்து இந்த புக்ஸிலியே மூழ்கி விட்டோம்! ட்ரெயின் கிளம்பறது,"

—இவைபோல இன்னும் எத்தனையோ கலப்பட வரிகளை அந்த ஏட்டின் ஒவ்வொரு இதழிலிருந்தும் ஒவ்வொரு கதை—கட்டுரையிலிருந்தும் எடுத்துக் காட்டலாம்.

'இந்து'-ஏட்டிலோ 'எக்ஸ்பிரஸ்' ஏட்டிலோ ஆங்கிலத்துக்கு நடுவே தமிழ்ச் சொற்களையோ எழுத்துக்களையோ கலந்து கட்டுரைகளை வெளியிடுவார்களா?

ஆனால் தமிழை எப்படி வேண்டுமானாலும் கொலை செய்யலாம், உண்மைத் தமிழன் தலையில் எவர் வேண்டுமானாலும் மிளகாய் அரைக்கலாம்!

மேலே எடுத்துக் காட்டியதைப் போல, தமிழ் அழிப்புக்கு கத்தி கடப்பாரைகளை எடுத்துக் கொடுத்துத் தமிழ் எழுத தெரியாதவர்களையே எழுத்தாளர்கள் ஆக்கி வரும் ஏடுதான் பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றித் தாக்குதல் கணை தொடுக்கிறது.

கண் குருடாகிவிட்டவர்களுக்குக் கதிரவனின் ஒளி அழகு எப்படித் தெரியும்?

கருத்துக் குருடர்களுக்குப் பெரியாரின் பகுத்தறிவுச்சுடர் எப்படிப் புரியும்?

தாக்குவதற்கு உரிமை உண்டா?

'அப்பன் சொன்னான்; பாட்டன் சொன்னான்: அது தப்பாக இருக்குமா?' என்று போன தடத்திலேயேபோய்க் கொண்டிருக்கும் நத்தை அல்லன் மனிதன்.

எட்டுத் திக்குகளிலும் பறந்து சென்று — எட்டாத தொலைவையும் எட்டமுயன்று —எண்ணற்ற மலர்களில் எல்லாம் ஏறி அமர்ந்து தேனைத் திரட்டிக் கூடுகட்டும் தேனீயைப்போல உழைக்க வேண்டியவன்—உயர வேண்டியவன் —மனிதன்.

இந்த உழைப்புணர்வை — புதுமைநோக்கை—பொதுமை மனநிலை—வளர்க்கப் பாடுபட்டவரே தந்தை பெரியார்.

அந்தப் பகுத்தறிவுப் பகலவனின் ஒளிக்கதிர் ஒவ்வொன்றும் 'புதுமை! புதுமை' 'என்று போர்ப்பரணி பாடியது.

அத்தகைய போர்ப்பரணிகளில் ஒன்றே தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஆகும்.

பச்சைநிறம் படரும் அளவுக்குப் பாசி படிந்த குளத்திலேயே மூழ்கிப் பழகிவிட்டவர்களுக்குச் 'சீர்திருத்தம்' என்னும்தேனருவிபிடிக்குமா? அதில் தலையை நீட்டத்தான் துணிச்சல் வருமா?

எனவேதான் தந்தை பெரியார் அவர்களுடைய ஏனைய சீர்திருத்தக் கொள்கைகளை எதிர்த்ததைப் போன்றேஅவர் தம் எழுத்துச்சீர்திருத்தத்தின் மீதும் எரிச்சலைக் கக்குகிறார்கள்.

ஒரு சொந்தச்சிந்தனையாளரின் நடைமுறைக்கொத்த நற்கொள்கையைப் புரிந்தும் புரியாதவர்களைப்போல அவர்கள் நடிக்கிறார்கள்.

எழுத்துச் சீர்திருத்தம் ஏன்?

பெரியார் எதற்காக இந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி எண்ணினார் — செயல்படுத்தியும் காட்டினார்?

அச்சுக்கலையைப்பொறுத்த மட்டில் மிகுதியாக உள்ள தமிழ் வரிவடிவங்களை ஓரளவு குறைக்கலாம். இதனால் அச்சு எழுத்துக்களுக்குச் செலவு

எனவே'தான் அச்சுக்கலையிலும் இழப்புகளைதவிர்த்துப் பல மிச்சங்களைக் காண்பதற்குத் திட்டமிட்டார் அவர்,

நடைமுறைக்கொத்த அறிவுக்குகந்த செயல்களை மட்டுமே செய்து நாளும் முன்னேற வேண்டும் மனிதன் என்று விரும்பினார் அவர். அத்தகைய தம் புதுமைச் சிந்தனைகளுக்கு ஏற்பவே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தையும் அவர் அறிவித்தார்; செயற்படுத்திக் காட்டினார்.

அதனால்தான் 'பகுத்தறிவும் மூடநம்பிக்கை ஆகமுடியும் என்று அரைவேக்காட்டுத் தனமாகத் தலையங்கம் தீட்டுகிறார்கள்.

அறிவியலால் விளைந்த அச்சுக்கலைமூலம் பணத்தை அறுவடை செய்து கொண்டு அதே அச்சுப் பொறிக்கு 'ஆயுதபூசை' செய்கின்ற கூட்டத்தைச் சேர்ந்தவர்களால் பெரியாரின் பகுத்தறிவு வெளிச்சத்தைப்பற்றி

(11ம் பக்கம் பார்க்க)

இந்தி ஏகாதிபத்தியம்:

முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விடப்பட்ட எச்சரிக்கை!

'இந்தியாவில் மொழி ஏகாதிபத்தியம் ஒன்று வளர்ச்சி பெற்று வருகிறது. ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பீகார் முதலிய குறிப்பிட்ட வட்டாரங்களில் இந்தி பேசப்பட்டு வருகிறது என்பது உண்மை. ஆனால் ஏனைய வட்டாரங்கள் பற்றிய நிலைமை என்ன? அங்கெல்லாம் இந்தி கிடையாதே! அரசியல் அமைப்பு மன்றத்தில் என்னுடைய கருத்தைக்கூற இந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்தினால் அது என்னால் இயலாது நாட்டிலிருந்து ஆங்கிலத்தை அகற்றவேண்டும் என்று நீங்கள் ஆசைகொள்ளும் அதேவேளையில், இந்தியா முழுமையிலும் இந்தி மொழியைப் புரிந்து கொள்ள முடியாத மக்கள் பெரும்பான்மையாக இருக்கின்றனர் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும் அனைவர் மீதும் இந்தி மொழியைத் திணிக்க எண்ணுகிற (இத்திமொழியாளர்களின்)சகிப்புத்தன்மையற்ற இந்தப் போக்கு, வலிவுள்ள ஒரு மத்திய ஆட்சி - ஓர் இந்தி அரசாங்கம் ஏற்பட்டுவிடலாமென்ற அச்சத்தை உண்டாக்கியுள்ளது.

(இந்திய அரசியலமைப்பு மன்றத்தில் அந்த மன்றத்தின் உறுப்பினரும், பின்னர் இந்திய நிதியமைச்சராகப் பதவி வகித்தவருமான காலஞ்சென்றடி.டி.கிருஷ்ணமாச்சாரி 5-11-48 அன்று பேசியது.)

புலனாய்வுத்துறை நிறுவனங்களா?

அரசியல்வாதிகளின் கைப்பாவைகளா?

'இண்டலிஜென்ஸ் ஏஜன்சிஸ்' தி சென்ட்ரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்.' 'இண்டலிஜென்ஸ் பீரோ அண்டு ரெவின்யூ இண்டலிஜென்ஸ்' — போன்ற இந்தியாவின் பல்வேறு புலனாய்வுத்துறை நிறுவனங்கள், அரசியல்வாதிகளின் 'கைப்பாவைகளாக' செயல்படுவதைத் தடுக்க—ஒரு சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்த முன்வந்துள்ளது மத்திய அரசு. இதற்காக ஒரு உயர்மட்டக் குழுவை அமைச்சரவை நியமித்துள்ளது.

நெருக்கடி நிலையின்போது ஆளுங்கட்சிக்கு ஆதரவாகச் செயல்பட்டு, அத்துமீறல்கள் பல புரிந்த மத்திய புலனாய்வுத் துறையினரின் ஒழுங்கீனங்களை வெளியிட்ட 'ஷா கமிஷன்' இந்த புலனாய்வுத்துறை நிறுவனங்களுக்கு சட்டப்பாதுகாப்பு அவசியம் எனப் பரிந்துரை செய்துள்ளது.

இருண்ட காலமும்...

[12-ப்பக்கத் தொடர்ச்சி)

டார். திடுக்கிடவைக்கும்வகையில் அந்த விசாரணைக் குழு பயங்கரமாக ஒருகேள்வியைப் போட்டது.

"விசாரணை செய்யாமல் ஓர் அறிக்கையை எப்படித் தயாரித்துக் கொடுக்கலாம்'' என்று கமிஷன் கேட்டபோது பதில் சொல்ல முடியாமல் அந்த அதிகாரி திணறினர்.

"முப்பத்து ஆறு மணி நேரத்திற்குமேல் பெண்களை 'லாக்கப்'பில் வைத்திருக்கக் கூடாது கல்லூரி மாணவன் தபான் பீஸ்வால்கூட முரட்டுத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கலாம்'' என்றும் அரசுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார் துணை ஐ. ஜி யான டி. எம். மிஸ்ரா.

மற்றொரு துணை ஐ. ஜி. யான பி. சி. ராத் தானும் எந்தவிதமான விசாரணையும் செய்யாமல் ஓர் அறிக்கையைத் தயாரித்து அரசுக்கு அனுப்பிவைத்ததாக ஒப்புதல் வாக்குமூலம்அளித்திருக்கிறார்.

மாணவர்கள்முரட்டுத்தனமாகக் காவல் நிலையத்தில் தாக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றி சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய பிரச்சினைகளுக்கு முதலமைச்சர் நந்தினி சத்பதி அவசர கோலத்தில் அள்ளித்தெளித்ததைப்போல் விசாரணையின்றியே அறிக்கை அளித்தாலும் சரி அவசரமாக வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கிறார்.

மாவட்டமுன்னாள்போலீஸ் அதிகாரியான நந்தி—நாடகத்தின் கதாநாயகன் அகந்தையோடு விசாரணைக்கூடத்திற்கு வருகிறார். தனது ஆதரவு பரிவாரங்களோடு — அதாவது கூலிப்பட்டாளங்களோடு!

எல்லாக் காவல்துறை அதிகாரிகளும் காக்கி உடையில் வருகைதர இவர் மட்டும்பணி உடுப்பு அணியாது சொந்த உடையில்வந்திருக்கிறார். ஆணையர் முன்னாலே வந்ததும் மரியாதைக்காக வணக்கம்கூட தெரிவிக்கவில்லை.

நீதிபதி பண்டா கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்காத நந்தி, "என் மீதுவேண்டுமென்றே குற்றம் சுமத்தப்படுகிறது குற்றப் பத்திரிகையை நான் பார்க்கவேண்டும் என்று மட்டும் ஒரு வரியில் பதில் சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும் சோஷலிஸ்ட்டுமான ஆர் எம். தாஸ் கமிஷன் முன்னாலே கூறும்போது, ஒரிசாவில் நெருக்கடி காலத்தில் நடந்த கொடுமைகளுக்கு ஔரங்கசீப் மன்னன் இருந்திருந்தாலும் தப்பித்திருக்க முடியாது என்று தெரிவித்திருக்கிறார்.

மகளிர் தலைவிகளான டாக்டர் ராதாதேவியும், கோடா பரிதேவியும் இளம் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி அன்றைய முதல்வர்நந்தினிசத்பதியிடத்தில் எடுத்துக்கூறி நியாயம் கேட்டதாக கமிஷன் முன்பு எடுத்துச் சொன்னார்கள்.

கைது செய்யப்பட்டமாணவர்களுக்குக் கைவிலங்கு போடப்பட்டகொடுமைபற்றியும் நீதிபதி பண்டாவிசாரணையின்போது எடுத்து கூறப்பட்டது.

பத்திரிகை நிருபர் நந்தா இந்த விசாரணையில் முக்கியமான சாட்சியாவார். இவரை எப்படியாகிலும் விலை கொடுத்து வாங்கிட டாக்டர் மகதாபை போலீஸ் அதிகாரி நந்தி அணுகியதாகக் கூறப்படுகிறது. ஆனால் நிருபர் நந்தா இதற்குப்பலியாகவில்லை

வங்கத்தின் எல்லையிலுள்ளது பாலசோர் நகரம். வங்காள உணர்வைத் தூண்டினால் ஆதாயம் தேடலாம் என்று முயற்சித்துப் பார்க்கிறாராம். ஆனால் அந்தப் போலீஸ் அதிகாரி மறந்து விட்டார். தனது நெருக்கடி கால படுபயங்கரமான கொடுமைக்கு ஒரு வங்காளப் பையனும், ஒரு இளம் பெண்ணும் பலியானார்கள். என்பதை. அவசரநிலைப் பிரகடனம்—என்பது நாட்டுக்காக அல்ல—நந்தினிகளுக்காகவே செய்யப்பட்டது என்பதை நாடு உணர்ந்துகொண்டிருக்கிறது.

இந்தி வேண்டுமா? இந்தியாவேண்டுமா??

'மலர்க மாநில சுயாட்சி' ஆசிரியர்

கே. எஸ் ஆனந்தம் எழுதிய

இந்தியா?... இந்தியாவா??

(ஆட்சிமொழிபற்றிய ஆய்வுக் கருவூலம்)

150 பக்கங்கள் : விலை ரூ 4.

திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் வெளியிடப்படும். மாநாட்டில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஆட்சிமொழி வரலாறு. அரசமைப்புச் சபையின் அநீதிகள், அரசியல் சட்டத்தின் இந்தித் திணிப்பு ஆணைக்குழு—மத்திய அரசுத் திட்டங்கள்; நேருவின் உறுதிமொழி — நச்சு வட்டம்; தலைமை நீதிமன்றத் தீர்ப்புக்கள்—ஆய்வுரைகள்.

மொழியினச் சமத்துவத்தைப் பெறுவதெப்படி' ஆட்சிமொழி சிக்கலையகற்றும் புதிய வழிவகை என்ன? இந்தி தொடர்ந்தால் இந்தியா இருக்குமா? இன்னும் பல வினாக்களுக்குரிய விடைகள். கலைஞரின் இந்தி எதிர்ப்புக் கருத்துக்கு விளக்கமளிக்கும் நூல்.

வந்த மடல்

ஆசிரியருக்கு வணக்கம்!

கழகத்தின் அதிகாரபூர்வமான நம்நாடு ஏட்டினைவாரந்தோறும் வாங்கிப் படிப்பதில் நானும் ஒருவன்.

'புனித ராஜ்யம்'' தொடர் நாடகம்உள்ளத்தைத்தொடும் உணர்ச்சி மிக்க அரசியல் காவியம்.

தாங்களின் சிறுகதை தெவிட்டாத தேனாகும். தொடர்கதை எழுதுவதாகச் சொன்னீர்கள் என்ன ஆயிற்று? அன்போடு கேட்கிறேன்.

ஆயிரம் பணிகள் தங்களுக்கு இருப்பினும், எழுத்துப் பணியில்தானே தாங்கள் இன்பம் காண்கிறீர்கள். தொடர் கதை எழுதி எங்களுக்கு இன்பத்தை ஊட்டுங்கள்.

மொத்தத்தில் 'நம் நாடு' தரம் மிகுந்த சிறந்த ஏடு.

அன்புள்ள,
கோட்டூர் நா. முருகன்,
சைதைப் பகுதி
தி. மு. க
துணைச் செயலாளர்.

இந்தி ஏகாதிபத்தியம் பற்றி 'கல்கி'யின் கணிப்பு!

"ஹிந்தி பாஷைக்காரர்கள் அந்த பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க விரும்புகிறார்கள் என்று நாம் சொல்லுவது விளையாட்டல்ல; வெறும் பயமுறுத்தலுமல்ல; வடநாட்டு அரசியல்வாதிகள் — ஹிந்தி பண்டிதர்களுக்கிடையே இத்தகைய ஏகாதிபத்திய வெறி வளர்ந்து வருகிறது என்பதற்குப் பல அறிகுறிகள்காணப்படுகின்றன. வடநாட்டுக்குச் சென்று வரும் தமிழ் நாட்டுப்பிரதிநிதிகள் பலரும் எற்கனவே இதைப் பற்றிப் புகார் செய்து வந்திருக்கிறார்கள்......எனவே ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கும் முயற்சி நமக்கு எற்பட்டுள்ள உண்மையான அபாயம் என்றே முடிவு கட்ட வேண்டியிருக்கிறது.''

['கல்கி' 7—5—1950 இதழில் ஹிந்தி 'ஏகாதிபத்தியம்' என்ற தலைப்பில் வெளியான தலையங்கத்தின் ஒரு பகுதி]

(10-ம்பக்கத் தொடர்ச்சி)

எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

ஆனாலும் தமிழை வைத்து—தமிழை அழித்து—வணிகம் நடத்துகின்றவர்கள் தமிழ் எழுத்துக்கள் பற்றியும் கருத்துக்கூறும் துணிவைப் பெற்றிருக்கிறார்கள்.

அவர்களைப்பற்றி திராவிட இயக்கத்தைச் சார்ந்த கட்சியினர் எச்சரிக்கையாகஇருக்க வேண்டும்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்! என்பது பழமொழி.

தமிழ்ப் பகைவர்களும் — அவர்களுக்குக் கொத்தடிமை ஆகிவிட்ட சில திராவிட இனத்தவர்களும் சிண்டு முடிந்துவிடும் வேலைகளைத் திறம்படச் செய்ய முனைகிறார்கள்.

என்னதான் தங்களுக்குள்ளே மனத்தாங்கல்கள் காரணமாக வெவ்வேறு அணியினராகப் பிரிந்துநின்றாலும் பெரியார் — அண்ணா வழியில் பீடுநடை போடுகின்ற திராவிட இயக்கக் கட்சியினர் அடிப்படையான இன—மொழி — நாடுபற்றிய கொள்கை விளக்குகளை எதிரிகள் ஊதி அணைத்திட இடந்தரவே மாட்டார்கள்.

இதனைத்தான் அண்மையில் டாக்டர் கலைஞர் அவர்கள் பெரியாரின் எழுத்துச் சீர் திருத்தம்பற்றித் தீட்டிய மடலும் தெள்ளத் தெளிவாக அறிவுறுத்துகிறது

எனவே, தமிழ்ப் பகைவர்களும். அவர்களின் கொத்தடிமைகளும் பெரியார் — அண்ணாவின் பகுத்தறிவுக் கதிரொளியை—புதுமைநோக்குப் போர்ப் பரணியைக் — கேலி செய்யும் போக்கினைக் கைவிடுமாறு எச்சரிக்கவிழைகிறோம்.

பூஞ்செடிகளுக்குப் பொலிவு சேர்ப்பதைப் புல்லுருவிகள் பழிக்கலாமா?

வைரமணிக்குப் பட்டை தீட்டுவதைக் கூழாங் கல்லா ஏளனம் செய்வது?

பிரதிநிதி;
கே. எம். ஜி. மாதவன்,
11 புதுத்தெரு. மைலாப்பூர்
சென்னை-4

1200 பக்கங்கள் கொண்ட மாநிலத் தன்னாட்சிக்

கலைக் களஞ்சியம்

வழக்கறிஞர்

கே. எஸ். ஆனந்தம் பி காம்., பி. எல்.

எழுதிய

"மலர்க மாநில சுயாட்சி"

"மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் விளக்கமளிக்கும் ஏராளமான எடுத்துக்காட்டுக்கள் — மேதைகள் பலரின் மேற்கோள்கள்—அடங்கிய அருமையான கருவூலம்.

-டாக்டர் கலைஞர்

திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் சலுகை விலை ரூ. 25-க்குக் கிடைக்கும்.

வாழ்க பேராசிரியர்!

நமது கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் ஐம்பத்தாறு ஆண்டுகள் கடந்து 19-12-78 அன்று தமது ஐம்பத்தேழாவது அகவையில் அடியெடுத்து வைக்கிறார்.

அவரது தந்தையார் மறைவெய்தியதை யொட்டி அவர் இவ்வாண்டு தமது பிறந்த நாளைக் கொண்டாட வில்லையென்றபோதிலும், அவருக்கு நமது நல் வாழ்த்தினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பேராசிரியர் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து நமது இலட்சிய வெற்றிக்குத் தமது தூய தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிட வேண்டும் எனும் நமது விழைவினை வெளிப்படுத்திக் கொள்கிறோம்.

[ஆ ர்]

இருண்ட காலமும் இந்திராவின் தோழியும்!

நெருக்கடி நிலை நடைமுறையில் இருந்தபோது ஒரிசா மாநிலத்தின் முதல்வராகப் பதவியில் அமர்ந்திருந்தவர் நந்தினி சத்பதி.

முதலமைச்சர் அதிகாரத்தை அத்துமீறிப் பயன்படுத்தினர், அதிகாரிகளும் குறிப்பாகக் காவல் துறையினரும் சட்டத்தைத் தம் கையிலே எடுத்துக் கொண்டு ஆட்டம் போட்டனர். அடங்காப் பிடாரிகளாக ஆடிப்பாடினர்.

ஏன் என்று கேட்க நாட்டில் நாதியில்லாத நிலை. கேள்வி கேட்டவர்களைச் சிறைக் கம்பிகளை எண்ண வைத்தனர். சித்திர வதைக்கு ஆளாக்கினர். அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்ட நிலை.

இந்த இருண்ட காலத்தின் கொடுமைகளைச் சந்தித்த இரவுகளும். பகல்களும் எத்தனை, எத்தனையோ!

நடந்துவிட்ட ஒன்றிரண்டு கொடுமைகளை மட்டுமாவது உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டினால்தான் நெருக்கடி நிலையின் கொடுமைகள் புரியும். வேதனைச் சுமையை இதயத்திலிருந்து இறக்கி விடுகிற செய்திகள் எத்தனையோ வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஒரிசா மாநிலத்தில் நெருக்கடி நிலையின் போது நடத்தப்பட்ட கொடுமைகள் பற்றி நாட்டுக்குத் தெரியப்படுத்த நீதிபதி பண்டா தலைமையில் விசாரணை கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் கமிஷன் முன்னால் விசாரணைக்கு வந்துள்ள சம்பவங்களைப் படிக்கும் போது நெஞ்சம் வெடித்து விடும் போல் இருக்கிறது.

ஒரு மூத்த போலீஸ் அதிகாரி விசாரணைக் கமிஷன் முன்னால் உறுதிமொழி எடுத்துக் கொண்டு கூறிய ஒரு சம்பவம் இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்கிறது.

அதிகார வர்க்கத்தின் மீதும் காவல் துறையினர் மீதும் மக்கள் வைத்துக் கொண்டிருக்கிற நம்பிக்கையின் அடித்தளத்தையே தகர்த்து விடும்போல் தெரிகிறது.

மூத்த அதிகாரிகளின்வர்க்கத்தைச் சார்ந்த ஐ. ஏ. எஸ்களும், ஐ. பி. எஸ்களும் கமிஷன் முன்னால் ஆஜராகும்படி கோரப்பட்டிருக்கிறார்கள்.

புவனேஸ்வரத்திலிருந்து 180 கிலோ மீட்டர் அப்பாலுள்ள பால சோரில் விசாரணைக் கமிஷனின் கூட்டம் தொடர்ந்து நடந்தது.

1975 அக்டோபர் திங்களில் நகர்க் காவல் நிலையத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் டோலாகோ பிண்டா பிரதான் இளம் பெண்களையும் இளைஞர்களையும் கொடுமையாகத் துன்புறுத்தினார் என்று தனது சாட்சியத்தில் முழுமையாக வெளியிட்டார் பிரதான் மேலும் உண்மையையும், நியாயத்தையும் நெஞ்சில் தேக்கியும், பயத்தைப் போக்கியும் தைரியத்தோடு கமிஷனிடத்தில் போலீஸ் அதிகாரி பிரதான் கூறினார். "காவல் நிலையத்தில் கல்லூரி மாணவர் பிஸ்வாஸ் காட்டுமிராண்டித் தனமாக அடித்து நொறுக்கப் பட்டார்.

அடிதாங்க முடியாத நிலையிலும் அச்சத்தினாலும் உடையிலேயே மலம் கழித்துக் கொண்டார் அந்த மாணவ இளைஞர்.

ஒரு பள்ளிமாணவியான அஞ்சலி என்பவர் கருத்தையின்றி தாக்கப்பட்டார், ஆதரவற்ற நிலையில் இருந்த இந்தப் பெண்களுக்குத் தன் மகளைக் கொண்டே உணவு வழங்கியும் காலைக் கடன்களை முடிக்கவும் உதவி செய்தேன் என்று அவர் கூறினார்.

ஹிட்லரின் ஜெர்மனி இரகசிய போலீஸ் படையைப்போன்று திகழ்ந்துவந்த நந்தினி சத்பதியின் இரகசிய, போலீஸ் அதிகாரியான நந்தி அடிக்கடி ஐ ஜி. யான சுவைனுக்கு ஆலோசனை வழங்குவார் ஆசிரியர் சொல்கிறபடி எழுதும் மாணவனைப் போல் அறிக்கை தயாரித்து அரசுக்கு அனுப்பி வைத்த அந்த அறிக்கை அவருடைய முகத்திரையைக் கிழித்துக் காட்டியது.

கால் முறிந்த நிலையில் தபான் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் அந்தப் போலீஸ் அதிகாரி ஒப்புக் கொண்டார்.

முன்னாள் ஐ ஜி. யான சுவைன் நடுக்கத்தோடும், உடல் நரம்புத்தளர்ச்சி நடையோடும் கமிஷன் முன்னால் நின்றார்.

மாநில அரசைப்பொறுத்த வரை தத்தகாடாவுக்கு இரகசியஏஜென்சிபணியினை செய்து வந்தவருக்கு முன்னாள் ஐ. ஜி. பிரதான் ஆலோசனையாளராக விளங்கி வந்திருக்கிறார்,

எந்தவிதமான விசாரணையும்செய்யாமல் அந்தமுன்னாள் உயர் அதிகாரி அறிக்கையைச் சமர்ப்பித்ததாகஒப்புக்கொண்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

லெனின்

காவல் நிலையத்திலேயே முப்பத்து ஆறு மணி நேரத்திற்கும்மேலாக சட்டத்துக்குப் புறம்பாக மூன்று இளம்பெண்கள் 'லாக்கப்'பில் அடைத்து வைக்கப்பட்டனர்.

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயணசெட்டிதெரு. இராயபுரம் 6.00013) அச்சிட்டுவெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், 'அன்பகம்' 508 அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009